விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 03 சனிக்கிழமை (17.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 149



# பாஜக இமாலய வெற்றி பிரதமராகிறார் மோடி

## காங்கிரஸ் படுதோல்வியடைந்தது

(புதுடில்லி)

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி எதிர்வரும் 21-ம் திகதி பதவி ஏற்க வுள்ளார் என பாரதிய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் 330 இற்கும் அதிகமான ஆசனங்களை பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி கைப்பற்றியுள்ளது.

பா.ஜ.க தனித்து 280 இற்கும் அதிகமான தொகுதிகளைக் கைப்பற்றி யுள்ளது. இது அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான 272 ஆசனங் களை விட அதிகமாகும். இந்த நிலையில், பா.ஜ.கவின் நரேந்திர மோடி இந்தியாவின் 15ஆவது பிரதமராக வரும் 21ஆம் திகதி பதவியேற்க வுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## மோடி பிரதமரானால் இலங்கைக்கு ஆபத்து

### தேசப்பற்றுள்ள இயக்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அன்று வெள்ளைப்புலி சொல் ஹெய்மினால் முடியாதுபோன தமிழீழத்தை, இன்று கறுப்புப்புலி ரமபோஸாவைப் பயன்படுத்தி உரு வாக்க சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டும் தேசப்பற்றுள்ள தேசிய இயக கம், இந்தியாவின் புதிய பிரதமராக மோடி பதவியேற்றால் இலங்கைக்கு ஆபத்து எனவும் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலா

20 ஆம் பக்கம் பார்க்க....



இந்தியாவில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற பா.ஜ.கவின் பிரதமர் வேட் பாளர் நரேந்திர மோடி காந்தி நகரிலுள்ள அவரது தாயிடம் ஆசி பெற்றபோது...

## பெரும் கட்சியானது அ.இ.அ.தி.மு.க. !

(புதுடில்லி)

இந்தியாவின் மூன்றாவது பெரும் கட்சியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்னேறியுள்ளது. நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத்

19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு வருமாறு மோடிக்கு அழைப்பு

(கொழும்பு)

இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்கும் நரேநதிர மோடியை இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். இந்தத்தகவலை ஜனாதிப தியின்செய்தித்தொடர்பாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

## மோடியை வாழ்த்தினார் முதலமைச்சர் விக்கி



(யாழ்ப்பாணம்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் வெற்றியைப் பெற்று இந்தியாவின் பிரதமராக பதவியேற்கும் நரேந்திர மோடிக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தனது வாழ்த்துக் களைத் தெரிவித்திருக்கின்றார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

## தோல்வியை பொறுப்பேற்றார் சோனியா

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலில் காங் கிரஸ் கட்சி மிக மோசமான தோல் வியை சந்தித்துள்ளது. இந்த தோல் விக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் தெரிவித்தனர். மேலும் பா.ஜனதா தலைமையிலான புதிய அரசு சிறப் பாக செயல்படவும் வாழ்த்து தெரி

19 ஆம் பக்கம் பார்க்க....

## 50 அந்தணர்களைக் கொண்டு கீரிமலையில் மகா யாகம் !

### உறவுகளின் ஆத்ம சாந்திக்காக

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்காலில் உயி ரிழந்த உறவுகளின் ஆத்மா சாந் தியடைய பிரார்த்திக்கும் முகமாக நாளை 18 ஆம் திகதி காலை 8 மணி முதல் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் 50 சிவாச்சாரியார்களைக் கொண்டு மிகப்பெரிய யாகம் நடத்தப் படவுள்ளதாகவும் இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு பிதிர்க் கடன் செலுத்தப்படவுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் வர்த்தகருமான தியா

19 ஆம் பக்கம் பார்க்க....

## முள்ளிவாய்க்கால் நினைவுச்சுடரை காலால் சேதப்படுத்திய பொலிஸார்

### மாகாண சபைக்கு முன் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் பேர வைச் செயலகத்தில் முள்ளிவாய்க் கால் நினைவு தினத்தை அனுஷ் டிக்க அனுமதி மறுத்த பொலிஸார், அஞ்சலிக்காக ஏற்றப்பட்ட சுடரை சப்பாத்துக்காலினால் எட்டி உதைத்து மிகவும் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டதோடு மாகாண சபை உறுப்பினர்களையும் அவ மதித்திருந்தனர்.

இறுதிப்போரில் முள்ளிவாய்க் காலில் கொல்லப்பட்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களுக்கு அஞ

19 ஆம் பக்கம் பார்க்க....



## வெற்றிக் கொண்டாட்டங்கள் நல்லிணக்கத்தை பாதிக்கும்

### கனடா தெரிவிப்பு

(கொழும்பு)

போர் வெற்றிக் கொண்டாட்டங் கள் நாட்டின் நல்லிணக்கத்தை மேலும் பாதிக்கும் என இலங்கைக் கான கனேடிய உயர்ஸ்தானிகர் செல்லி விட்டிங் தெரிவித்துள்ளார். நாளை ஞாயிற்றுக்கிழமை மாத தறையில் நடைபெறும் போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்கப் போவதில்லை. இவ்வாறான நிகழ்வு கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது.

19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரிப்பாய் கொலை வழக்கு சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ். அச்சுவேலி, கதிரிப்பாய் பகுதியில் கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற முக்கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, கொலைக்கு பயன்படுத்திய வாளை, பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

அச்சுவேலி, கதிரிப்பாய் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மகள் மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

நிக்குநானந்தன் அருள்நாயகி (வயது 50), யாசோதரன் மதுசா (வயது 27), நிக்குநானந்தன் சுபாங்கன் (வயது 19) ஆகிய மூவரும் பலியாகியிருந்ததுடன், தனஞ்செயன தர்மிகா (வயது 25) மற்றும் க.யசோதரன் (வயது 30) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

தொடர்ந்து இக்கொலைகளுடன் தொடர்புடையவரென, படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தர்மிகாவின் கணவரான பொ.தனஞ்செயன், ஊரெழு பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதேவேளை, இந்தக் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டியினையும் பொலிஸார் கைப்பற்றியதுடன், முச்சக்கர வண்டி உரிமையாளரினையும் அச்சுவேலி பொலிஸார் கைது செய்திருந்ததுடன், கொலைக்கும் அவருக்கும் தொடர்பில்லை என்பதினை விசாரணைகளில் அறிந்த பொலிஸார் அவரை பொலிஸ் பிணையில் விடுவித்திருந்தனர்.

இந்நிலையில் பிரதான சந்தேகநபர் கடந்த 5ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது, நீதவான் நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். (எ-4)

# ஊழல் அரசை வெளியேற்றிய இந்திய நாட்டு மக்கள்-பொன்சேகா

இலங்கை மக்கள் இந்திய மக்களிடம் இருந்து உதாரணத்தை கற்றுக்கொள்ள வேண்டும் என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கிய இந்திய அரசாங்கத்தை அந்நாட்டு மக்கள் ஆட்சியில் இருந்து அகற்றியுள்ளனர்.

இதுபோல் இலங்கை மக்களுக்கும் ஊழல் மோசடி மிக்க நாட்டை சுரண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை தோற்கடிக்க இந்திய மக்களை பின்பற்றி நாட்டை காப்பாற்ற வேண்டும்.

இந்திய மக்கள் ஊழல் மற்றும் நிருவாக திறமையற்ற அரசாங்கத்தை நிராகரித்து ஒரு புதிய அரசாங்கத்தை தேர்ந்தெடுத்ததன் மூலம் ஒரு பொறுப்பான முடிவை எடுத்துள்ளனர்.

10 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்த ஊழல் மிக்க அரசாங்கத்தை அகற்ற இந்திய மக்கள் எடுத்த முடிவு பாராட்டத்தக்கது.

நல்லாட்சி மற்றும் அனைவருக்கும் நீதியை ஏற்படுத்த நாட்டை ஊழலில் இருந்து பாதுகாக்க, நாட்டு மக்கள் பொறுப்பான மற்றும் தைரியமான முடிவுகளை எடுக்க வேண்டும் எனவும் பொன்சேகா கேட்டுக்கொண்டுள்ளார். (எ-11)

## இராணுவ அதிகாரிகளை குற்றவாளியாக்க முயற்சி

(கொழும்பு)

இராணுவ உயர் அதிகாரிகளை யுத்தக் குற்றவாளிகளின பட்டியலில் இணைப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் முயற்சித்து வருவதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவில் யுத்தக் குற்றவாளிகள் பட்டியலில், இலங்கையின் முக்கிய படையதிகாரிகளின பெயர்களை இணைப்பதற்கு நாடு கடந்த தமிழீழ இராச்சியம் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த நிகழ்வு நடைபெறும் தினத்தில், பிரித்தானியாவில் இலங்கையின் முக்கிய படையதிகாரிகளை யுத்தக் குற்றவாளிகளின் பட்டியலில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறித்த கொழும்பு ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-11)


மணிவிழா வாழ்த்துக்கள்
17.05.2014



உயர்திரு.மு.வ.செல்வராசா
(மாகாணக் கல்விப் பணிப்பாளர் - வட மாகாணம்)
சாந்தம் ததும்பும் வதனம்
காந்தம் போல் ஈர்க்கும் பண்பு
சாதனைகள் புரிந்த தீரம்
கல்விக்காய் வாழ்ந்த இதயம்
மணிவிழாக் காணும் இந்நாளில்
பணிதனை போற்றி நயந்து
வாழ்த்துகின்றோம்.

கோட்டக்கல்வி அதிகாரி,
அதிபர்கள்,
யாழ்.கல்விக் கோட்டம்.
யாழ்ப்பாணம்.
(6400)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 180/=
இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.
(சி-7379)
நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

ஹோட்டல் பிள்ளையார் இன் இல் விசேடமாக தயாரிக்கப்பட்ட இந்திய சமையல் கலை வல்லுநர்களின் கை வண்ணத்தில்.
1. பூரி
2. சப்பாத்தி
3. ரவாதோசை
4. வெங்காய தோசை
100/= மட்டும்
(சி-7376)
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532

விற்பனைக்கு - மோட்டார் சைக்கிள்
XXXX எனும் தொடர் இலக்கமுடைய சவாரி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு (6396)
தொடர்புகளுக்கு :- 0779251054

சிவபூமி முதியோர் இல்லம்
தொல்புரம், சுழிபுரம்.



சிவபூமி முதியோர் இல்ல 7-வது ஆண்டு நிறைவு விழாவும்,
வைத்திய நிபுணர் அமரர் செல்வி யமுனா மார்க்கண்டு
நினைவு மண்டபத் திறப்பு விழாவும்

அழைப்பிதழ்

தலைவர்: கலாநிதி ஆறு.திருமுருகன்
காலம்: இன்று (17.05.2014) பி.ப 4 மணி
(6397)

அன்புடையீர்:
வணக்கம்
இறையருளாலும் தங்கள் அனைவரது ஆசியாலும் ஆதரவாலும் எங்கள் இல்லம் 7-வது ஆண்டினை நிறைவு செய்துள்ளது. தற்போது அன்புக்குரிய 63 மூத்தோர் எமது இல்லத்தில் வாழ்கிறார்கள். எமது இல்லத்தின் கட்டடத் தேவையை நிறைவு செய்யும் வகையில் காரைநகர் மார்க்கண்டு சிவபாக்கியம் குடும்பத்தினர் தங்கள் தலைமகள் அமரர் செல்வி Dr. யமுனா மார்க்கண்டு நினைவாக புதிய விடுதிச்சாலையை நவீன வசதிகளுடன் அமைத்துத் தந்துள்ளனர். ஆண்டுவிழா நாளில் புதிய மண்டபத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில் தாங்கள் அனைவரும் வருகை தந்து விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


மண்டபத்தினை திறந்து வைப்பவர்கள்:- திரு.திருமதி தி.மார்க்கண்டு சிவபாக்கியம் தம்பதிகள்

சிவபூமி முதியோர் இல்லம்
தொல்புரம், சுழிபுரம்.
021-3214230, 021-2250085

நிர்வாகசபை
சிவபூமி அறக்கட்டளை
[illegible]
021-2227938

E-Mail-sivapoomi@gmail.com


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 21 |
| 07 | 04 |
| 1948 | 2014 |

**அமரர் வேலுப்பிள்ளை மார்க்கண்டு (ஆராதனா ஆட்ஸ்)**

பி.இடம்: 3ம் வட்டாரம் புங்குடுதீவு , குறிகாட்டுவான்

வ.இடம் இல. 07/30 வீட்டுத்திட்டம், உதயநகர், கிளிநொச்சி

அன்புடையீர்!

கடந்த 21.04.2014 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு வேலுப்பிள்ளை மார்க்கண்டு (ஆராதனா ஆட்ஸ்)அவர்களின் அந்தியேட்டிக் கிரியை எதிர்வரும்19.05.2014 திங்கட்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியை 21.05.2014 புதன் கிழமைஅன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிராத்தனையில் கலந்துகொண்டு அதனைத்தொடர்ந்து நடக்கும் மதியபோசன நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்
மா.கிருபாகரன்
(கிருபா ஆட்ஸ்) 0770547344
மா.பார்த்தீபன்
(பார்த்தீபன் ஆட்ஸ்) 0777402847
தி.கிருஷ்ணவேணி
[illegible]தாசன் (கண்ணன் ஆட்ஸ்)
கிளிநொச்சி

இல.07/30 வீட்டுத்திட்டம்,
உதயநகர் மேற்கு
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் இறந்தவர்களை ஒன்றுகூடி அஞ்சலிக்கும் உரிமை எமக்கு வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இறந்து போனவர்கள் நமது உறவினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அகால மரணமடைந்த பெரும் எண்ணிக்கையான நமது சமூக உறுப்பினர்களுக்கு ஒன்று சேர்ந்து துக்கம் அனுஷ்டிக்கும் உரிமை தமிழர்களுக்கு இருக்க வேண்டும். சிங்கள மக்கள், மரணித்த ஜே.வி.பி கிளர்ச்சியாளர்களை நினைவு கூரும்போது இத்தகைய அடக்கு முறைகளுக்கு அவர்கள் ஆளாகப் போவதில்லையே. இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அச்சங்கத்தின் தலைவர் கலாநிதி ஜெ.பி. ஜெயதேவனால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 1970 களிலும் 1980 களின் முற்பகுதிகளிலும் இப்பல்கலைக் கழகம் கொண்டிருந்த தரத்துக்கு மீள எழும் என்னும் நம்பிக்கையை தகர்க்கும் வகையிலான பயமுறுத்தல்களையும் தலையீடுகளையுமே நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஒருதரப்பு மாத்திரம் பயங்கரவாதத்தில் ஈடுபட்டிராத அந்த யுத்தம் முடிவுக்கு வந்து 5 வருடங்கள் கடந்த பின்னரும் யுத்தம் பற்றி தமிழர் கதைப்பது ஆபத்தான விடயமாகக் கருதப்படுவது ஏன்? இதற்கான விடை சுதந்திரம் அடைந்ததிலிருந்து தொடரும் தேசியப் பிரச்சினைக்கு வேண்டப்படும் அரசியல் தீர்வுக் கான சாத்தியப்பாடு குறைந்துகொண்டே போவதால் ஒன்றுக்கொன்று எதிரான திசைகளில் வளரும் கருத்துக்களுடன் தொடர்புபட்டது.

இந்த வேளையில் இதேநாளை யுத்த வெற்றியின் நினைவாக தன்னை இதன் நாயகர்களாக ஆக்கி அரசாங்கம் பெரும் ஆரவாரத்துடன் மாத்தறையில் கொண்டாடவுள்ளது என்பதை மறக்காதீர்கள். சிங்கள மக்கள் தன்னைச் சங்கடப்படுத்தும் கேள்விகளைக் கேட்பதைத் தவிர்த்துக் கொள்வதற்காகவா அரசு பயங்கரவாத மீளெழுச்சி என்ற பூச்சாண்டியைக் காட்டுகின்றது?

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் மடிந்து போன இளையோரும் முதியோருமான ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை தமிழ் மக்கள் நினைவு கூருவது ஏன் தடுக்கப்படுகின்றது? அப்போது அவர்கள் சிதறுண்டிருந்தனர், அநேகமானோர் குடும்பங்களைப்பிரிந்திருந்தனர், அவர்களின் அன்புக்குரியவர்கள் துக்கமனுஷ்டிக்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் உயிரிழந்திருந்தார்கள். இறந்தவர்கள் தமது உறவினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அகால மரணமடைந்த பெரும் எண்ணிக்கையான தமது சமூக உறுப்பினர்களுக்கு ஒன்று சேர்ந்து துக்கமனுஷ்டிக்கும் உரிமை தமிழர்களுக்கு இருக்கவேண்டும்.

சிங்கள மக்கள் மரணித்த ஜே.வி. பி.கிளர்ச்சியாளர்களை நினைவு கூரும்போது இத்தகைய அடக்கு முறைகளுக்கு அவர்கள் ஆளாக்கப் படுவதில்லையே! யுத்தத்தினை அரசியல் மோசடிக்காக அரசாங்கம் பயன்படுத்த எண்ணும் போது, தமது நிலங்களும் அடையாளங்களும் சிங்கள மயப்படுத்தப்படுவதால் ஏற்படும் அவமதிப்பும் நம்பிக்கையீனமும் யுத்த இறுதி மாதங்களில் ஏற்பட்ட பாரிய மனித அவலங்களை மூடி மறைக்கும் செயலும் விடுதலைப்புலிகள்தங்களைக் கேடயமாக வைத்திருந்த கோபத்திற்கும் அப்பால் அரசின் நோக்கத்திற்கு எதிர்மாறாக விடுதலைப் புலிகளை நோக்கிய வெளிப்படுத்தப்படாத ஒரு நாட்டத்தை மக்களுக்கு கொண்டு வரும்.

இப்போரானது எமது வரலாற்றின் ஒரு பகுதி. இதன் முடிவைப் பற்றி மட்டுமல்லாது முடிவுக்கு முன்னர் இப்போரை மூன்று தசாப்தங்களாக தொடரச் செய்த அனைத்து பகுதியினரதும் சீர்கெட்ட அரசியல் பற்றியும் முடிவு க்குப் பின்னரும் இனி வரும் காலத்திற்கும் எங்களைப் பாகுபாடென்னும் சேற்றில் அமிழ்த்தச் சதி செய்பவர்கள் பற்றியும் நாம் வெளிப்படையாகப் பேசவேண்டும்.

இதுபோன்ற விடயங்களில் சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டியது பல்கலைக்கழகமே. ஆனால் நிர்வாகிகள் அடக்கு முறையைப் பயன்படுத்தி தமக்கு வேண்டாதவர்களை அகற்றும் அரசியல் மயப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத்தால் கௌரவத்துடன் கூடிய சமூக நல்லிணக்கத்திற்கு பங்களிப்பு வழங்க முடியாது. பல்கலைக்கழகம் மூடப்பட்ட முறையே இதற்குச்சான்றாகவுள்ளது.

மேற்படி பல்கலைக்கழக மூடல் தொடர்பான அறிவித்தலுக்குபொறுப் பேற்கவேண்டியவர்கள் துணைவேந்தரும் பதிவாளருமாவர்.

ஆனாலும் இவர்கள் இதற்கான பொறுப்பினை ஏற்காததுடன் இதற்குப் பதிலளிப்பதிலிருந்தும் நழுவியுள்ளனர். கலைப்பீடாதிபதி பேராசிரியர் சிவநாதன் விடுதலைப் புலிகளின் மீள்வருகைக்கு துணைபோவதாக சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நாகரிகமற்ற பயமுறுத்தலை பேரவையும் பல்கலைக்கழக நிர்வாகமும் கண்டித்திருக்க வேண்டும். அண்மைக்கால தவறான நியமனங்களை பேரவையில் கண்டித்திருந்த ஒரே நபர் கலைப்பீடாதிபதியே.

பேச்சுச் சுதந்திரத்திற்கும் விவாதிப்பதற்குமான பாதுகாப்பான இடமாக பல்கலைக்கழகம் இல்லாதுவிடின் விரிவுரையாளர்கள் தாமறிந்த உண்மைகளை கற்பிக்க அஞ்சுவார்களாயின், மாணவர்கள் விரிவுரைகளுக்கு வர அஞ்சுவார்களாயின் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தமது கல்வியைத் தொடரமுடியாது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டோ அல்லது தகவல் தருபவர்களாகவோ பாவிக்கப்படுவார்களாயின் நாங்கள் எமது இளையோர்களுக்கான வளமான எதிர்காலத்துக்கான வாய்ப்புக்களை மறுப்பது மாத்திரமன்றி இலங்கையர் அனைவரதும் வளமான, அமைதியான எதிர்காலத்தினையும் பாழடிக்கின்றோம்.

அடக்குமுறை மற்றும் பயமுறுத்தல் ஊடாக சமூகத்தினை பணிந்து போகவும் மௌனிக்கவும் செய்யலாம். ஆனாலும் உண்மை இங்கு தொலைந்து போகின்றது..

விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கும் ஞானத்தேடல் எல்லாவற்றுக்குமான அடிநாதமாக விளங்குவது உண்மை. உண்மை தொலைந்துபோனதொரு சூழலில் பல்கலைக்கழகத்தால் உண்மையானதொரு பல்கலைக்கழகமாக செயற்பட முடியாது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)




## இராசி பலன்

**17.05.2014**

(வைகாசி 03, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
திருதியை முன்னிரவு 8.09 மணிவரை
மூலம் பின்னிரவு 4.15 மணிவரை
இராகுகாலம் 8.53-10.23 மணிவரை
சுபநேரம் 2.53-4.23 மணிவரை

வளவன்

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கலாம்.

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்கள் தாமதமாகும், போசன சுகமுண்டு, சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**மிதுனம்:** குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், முயற்சிகள் எளிதில் கைகூடும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும் நாள், தனவரவு திருப்திகரமாக அமையும், பயணங்கள் எளிதில் கைகூடும், தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், பொதுநல ஈடுபாடுகள் அதிகரிக்கும்.

**மகரம்:** காரிய அலைச்சல்களால் மனச் சோர்வுகள் ஏற்படலாம், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையை கேட்டு நடப்பது நல்லது.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய நபர்களின் சந்திப்பு உண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** கற்பனை மிகுதியான நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சோம்பலை விலக்கு வது நல்லது, பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** உங்களின் சொற்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், வேலைகளை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கன்னி:** தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையில் நினைவேந்த முடியாது

## பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் மே மாதம் 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வு அனுஷ்டிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ பி.விமலசேன தெரிவித்தார்.


இத்தடையுத்தரவு வடக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரிலேயே பிறப்பிக்கப்பட்டதாக அத்தியட்சகர் முதலில் தானாகவே கூறிய போதிலும் பின்னர் அவ்வறிப்பை தான் கூறியதாக விடுத்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையில் மே மாதம் 18 நினைவு நிகழ்வுகள் அனுஷ்டிக்கப் போவதாக எமக்கு தகவல்கள் கிடைத்தன. அதனை தடுப்பதற்கு நாம் பல முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். இவற்றில் ஒன்று வடக்கு மாகாண பேரவைச் செயலாளரிடம் தொடர்பை ஏற்படுத்தியிருந்தோம். அச் சபையின் வாயில்களை மூடி திறப்பைதான் எடுத்து வைத்துள்ளதாகவும் எமக்கு அறிவித்தார் என்றார். (அ-4)

நன்றி-மிரர்



# மாகாண கல்விப் பணிப்பாளருக்கு மணிவிழா



வடக்கு மாகாண கல்விப் பணிப் பாளர் வயிரமுத்துசெல்வராசாவின்மணி விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கர வெட்டி யா/விக்னேஸ்வராக் கல் லூரியில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை கரவெட்டி யா/விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் மு.கனகலிங்கம் ஆற்ற வாழ்த்துரைகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, யாழ் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீட முன்னாள் பேராசிரியர் எம்.நடராஜ சுந்தரம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், வட மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ச.சத்தியசீலன், யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச்செயலர் வே.தி.செல்வரட்ணம், ஓய்வுநிலை மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா, வடகிழக்கு மாகாண முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரிய தம்பி, வடமாகாண கல்வி அமைச்சின் ஓய்வுநிலை பிரதிச் செயலர் ப.விக்கினேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்துவார்கள். (2)

# விவசாய டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்குக

## மாகாண விவசாய பணிப்பாளர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

விவசாய டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்குமாறு வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதன் மூலம் விவசாய டிப்ளோமாதாரர்கள் மாகாண விவசாயத் திணைக்களத்தின் விவசாயப் போதனாசிரியர்களாகவும் காணி நிர்வாகத் திணைக்களத்தின் குடியேற்ற உத்தியோகத்தர்களாகவும் நியமனம் பெறத் தகுதியுடையவராகின்றனர்.

அதேவேளை இவர்கள் மத்திய விவசாய திணைக்களத்தின் கீழான விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள், விவசாயப் பாடசாலைகள், விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிறுவனங்கள், விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை ஆகிய அலுவலகங்களில் விவசாயப் போதனாசிரியர்களாவும் ஆராய்ச்சி உதவியாளர்களாகவும் நியமனம் பெறத் தகுதியுடையவராகவுள்ளனர். அத்துடன் உடனடி வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான விவசாய டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் வட மாகாணத்தில் போதியளவு இல்லை.

ஒப்பீட்டளவில் ஏனைய பல அரச சேவைகளை விட விவசாயப் போதனாசிரியர்கள் சேவையானது உயர்ந்த கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலும் பல சலுகைகள் கொண்ட ஒரு தொழில்நுட்ப சேவையாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள சேவைப் பிரமாணக்குறிப்பின் பிரகாரம் மிகக் குறைந்த காலத்தில் உயர் தரத்திற்கு பதவியுயர்வு பெறுவதும் சாத்தியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கற்கை நெறிக்கு க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய மாணவர்களே விண்ணப்பிக்கலாம்.

இவ் விண்ணப்பம் கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை 25/04/2014 வெளியான வர்த்தமானி பத்திரிகையிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ)

# பல நோக்கு கூட்டுறவு சங்க கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டு

பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கதவு உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக கூட்டுறவு சங்க முகாமையாளரினால் பொலிஸ்நிலையத்தில் நேற்று காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் கரம்பைக் குறிச்சி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பெறுமதியான பால்மா பெட்டிகள், தேயிலை போத்தல்கள் மற்றும் சவர்க்காரப் பொருட்கள் என பல்வேறு வகையான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

அத்துடன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வரணி, கொடிகாமம், பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள இரு ஆலயங்களின் பஞ்ச மணிகள் சில விசமிகளினால் திருடப்பட்டன.

எனவே, இத் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டவர்களே நேற்று முன்தினம் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் எனஅப்பிரதேச வாசிகள்சுட்டிக்காட்டியுள்ளனர்.(2-272)




# வில்லூன்றி விநாயகராலய வருடாந்த பெருவிழா

வில்லூன்றி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தினமும் காலை 7.45 மணிக்கும் பிற்பகல் 5.30 மணிக்கும் வசந்த மண்டப பூசை நடைபெறும் என தர்மபரிபாலன சபை தலைவர் அறிவித்துள்ளார். (2)

# கலை எடுத்தாளுநர்களின் வீடியோவை திரையிடல்

சமகால கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் இரண்டாவது நிகழ்வாக சர்வதேச சுதந்திர கலை எடுத்தாளுநர்களின் செயற்றிட்டம் 35 இன் 2 ஆவது தொகுதியின் 3 ஆவது பகுதியை திரையிடவுள்ளது.

இப்படைப்பு 35 சர்வதேச கலை எடுத்தாளுநர்களின் பயணக்கண்காட்சி ஊடாக ஒழுங்குபடுத்த ப்பட்ட தெரிவில் வரும் ஒவ்வொரு கலைஞர்களின் வீடியோ கலைக் காட்சியை அடிப்படையாக கொண்டது அத்துடன் சமகாலக் கலை அனுபவத்தை உலகம் முழுவதற்குமுள்ள பார்வையாளர்களுக்கு கொடுப்பதன் முக்கியத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இக் கலை எடுத்தாளுநர்கள் நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்குபவர்கள்.

நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம்199, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமகால கலை கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக் கான இலங்கை ஆவணக் காப்பக முகாமையாளர் தி.சதீஸ்குமார் கேட்டுள்ளார். (அ)



யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடத்தும் இயல், இசை, நாடக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம் பெற்றன. இதன் போது விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா [illegible] பேராசிரியர் வேல்நம்பிக்கு விருதினை வழங்குவதையும் பாசையூர் சென் அன்ரனீஸ் கலைக்கழகம் வழங்கிய வீரபாண்டிய தென் மோடிக் கூத்தின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 பேரை கொட்டியது குளவி

(ஹற்றன்)

ஹற்றன் டிக்கோயா பிரதேசத்தில், போடைஸ் பகுதியை சேர்ந்த இன்ஜஸ்ட் குரூப் பீரட் பிரிவு தோட்டத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் குளவி கொட்டியதால் 11 பேர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருக்கும் போது கழுகு ஒன்று மரத்தில் இருந்த குளவி கூட்டைக் கலைத்ததால் குளவிக் கூடு கலைந்து கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களின் மீது இவ்வாறு தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் இருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் ஏனைய 9 பேர் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (2)


**29 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்**

**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**



யாழ். **கலாலயா** பயிற்சியகம்

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**

**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials) ✌ Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) ✌ Nail art
- மெஹந்தி போடுதல் ✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 23-05-2014**
**வெள்ளி காலை 9.30 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-05-2014**
**ஞாயிறு காலை 9.30 மணி**
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

GURU



## இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக விழா-2014

**தலைவர்**
**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**

**17.05.2014 ஐந்தாம் நாள்**

**(63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்)**

நேரம்:- பி.ப. 4 மணி.

**பிரதம விருந்தினர்**

திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்கள் (முதல்வர், யாழ். மாநகர சபை)

✝ ஈழ நல்லூர் P.S பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர் வழங்கும்

**மங்கல இசை**

*நாதஸ்வரம்*
★ பிச்சையப்பா ரஜீந்திரன் (ரஜீவன்)
★ வைத்தீஸ்வரன் கண்ணன்

*தவில்*
★ பிச்சையப்பா ரஜீந்திரன்
★ M. சுதானந்தன்

✝ மங்கல விளக்கேற்றல்
✝ தேவாரம்: செல்வி. அபிராமி ரவிச்சந்திரன்
✝ ஆசியுரை: வண. பிதா பா.பி.இராசலிங்கம் அவர்கள் (பங்குத்தந்தை- நாவாந்துறை)
✝ வாழ்த்துரை:- திரு. சோ. பத்மநாதன் (முன்னை நாள் அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
✝ சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும்

**சுஃடிவிளையாடு பாப்பா**
***நாதசமர்ப்பணம்***

தயாரிப்பு: நல்லை G. கண்ணதாஸ்

*குரல்:* திரு. தவநாதன் றொபேட்
*வயலின்:-* திரு.மு.குகபரன்
*கீபோட்:-* திரு. க.ஸ்ரீகுகன்
*தவில்:-* திரு. ஆனந்தகணேசன்
*தபேலா/ கடம்:-* திரு.ஞானவேல் வசந்
*புல்லாங்குழல்:-* திரு.R.வசந்தன்
*மிருதங்கம்:-* நல்லை G. கண்ணதாஸ்
*வீணை:-* திருமதி க.பாலினி
*முகர்சிங்:-* திரு. N. சதீஸ்குமார்

(6379)

✝ **கொக்குவில் கலாபவன மாணவர்கள் வழங்கும்**
**நர்த்தன நிவேதனம்**

*நட்டுவாங்கம்:* திருமதி சாந்தினி சிவநேசன்
*வயலின்:* திரு. அ.ஜெயராமன்
*பாட்டு:* திரு. த.றொபேட்
*மிருதங்கம்:* திரு.G.கண்ணதாஸ்

✝ கலைஞர்கள் கௌரவிப்பு
✝ பிரதம விருந்தினர் உரை
✝ திருமறைக் கலாமன்றம் வழங்கும்

**குவேனி**
**(தென்மோடி நாட்டுக்கூத்து)**

✝ நன்றியுரை


## மரண அறிவித்தல்

மலர்வு 02-05-1968



உதிர்வு 14-05-2014

**திருமதி. தர்ஷினி குமாரதாசன்**

(முன்னாள் ஆசிரியை, கொழும்பு சைவ மங்கையர் கல்லூரி)

யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ். நல்லூர் மற்றும் மெல்பேர்ண், அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.தர்ஷினி குமாரதாசன் அவர்கள் 14-05-2014, புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், அமரர் C.K.இலங்கராஜா - குலமணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், நெடுந்தீவைச் சேர்ந்த அமரர்கள் பண்டிதர். நா கந்தையா - ஸ்ரீபத்மா தம்பதிகளின் சிரேஷ்ட மருமகளும், அகில இலங்கைக் கம்பன் கழக ஸ்தாபக செயலரும், யாழ். பல்கலைக் கழக முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தருமான குமாரதாசனின் அன்பு மனைவியும், பிரசன்னாவின் ஆருயிர் அன்னையுமாவார்.

அன்னார், ராஜினி, நிரஞ்ஜினி(மெல்பேர்ண்), ரவிராஜ்(U.K), 'கம்பவாரிதி' ஜெயராஜ் ஆகியோரின் அன்புத் தங்கையும், சந்திரகுமாரி(U.K), ஜெயதாசன்(Norway), கண்ணதாசன்(Canada), செந்தூரன்(U.S.A) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

சிவானந்தன்(கொழும்பு), சந்திரசிவம்(மெல்பேர்ண்), மயூரவரதன்(U.K), மேனகா(U.K), மல்லிகா(Norway), சித்திரா(Canada), ராஜி(U.S.A), ஆகியோரின் திருமண உறவுச் சகோதரியும்,

மயூரன், ரேணுகா, கௌரிசங்கர், சுரேன், சுரேஸ், ஆகியோரின் அன்புச் சித்தியும், ஸ்ரெபனி, டனி, அஞ்சலி, சிந்துஜா, அஸ்வின், கவின் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், மதனரூபன், கிருஷாந்தன், காயத்திரி, பவித்திரா, Dr. சாம்பவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அமரரின் இறுதிக் கிரியைகள் Springvale Botanical Cemetery, 600 Princes Hwy, Springvale VIC 3171இல் அமைந்துள்ள Boyds Chapel இல் 18-05-2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் நடைபெற்று, உறவுகளின் அஞ்சலிக்குப்பின் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு:
குமாரதாசன்: 613-98010039 / 0411 846 320
பிரசன்னா: 0403 493 981
ரவிராஜ்(U.K): 44-208-6441940
ஜெயராஜ் (இலங்கை) -94 112-360525
நிரஞ்ஜினி சந்திரசிவம்: 613-98864378

(சி-7384)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி கி.பா: 58<br>செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Q.S. / தொழில்நுட்ப உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3135 | பிறப்பு: 1966 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 30<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA / பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: G/3124 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 25 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 178 cm<br>தகைமை/தொழில்: A/L, Electricians / வியாபாரம்<br>தொ.இ: B/3136 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 3<br>கி.பா: 39.5 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBA - Following<br>தொ.இ: G/3125 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 15.25 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/3137 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 21.25 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc, MSc, PHd - Following (அமெரிக்கா)<br>தொ.இ: G/3128 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 38.75 செவ் 8 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: A/L / ஆயுள்வேத மசாச்சர்<br>தொ.இ: B/3141 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 34.25 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Management / வங்கியாளர்<br>தொ.இ: G/3130 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக தேர்தலில் நிற்கும் எண்ணமில்லை

## அநுரகுமார எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

**பொது வேட்பாளராக நிற்கும் எண்ணம் எனக்கு இல்லை. அரசாங்கத்தை வலியுறுத்தும் கட்சியாக செயற்படவே நாம் விரும்புகின்றோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

மூவின மக்களையும் பாதுகாத்து இனப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். இதனைத் தொடர்ந்தும் வலியுறுத்துவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெறுமாயின் பொது வேட்பாளருக்கு அநுரகுமார திஸாநாயக்க தகுதியானவர் என்ற கலாநிதி தயான் ஜயதிலகவின் கருத்து தொடர்பில் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலொன்று தற்போதைய சூழ்நிலையில் இடம்பெறக்கூடிய சாத்தியம் இல்லை. அவ்வாறானதொரு நிலையில் சகல கட்சிகளும் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர்.

அதேபோல் தற்போது பொது வேட்பாளராக நியமிப்பதில் என்னை தெரிவித்திருப்பது கலாநிதி தயான் ஜயதிலகவின் தனிப்பட்ட கருத்து மட்டுமே. எவ்வாறிருப்பினும் எமது செயற்பாடுகள், கட்சியின் முற்போக்கு சிந்தனைகள் என்பன பெரும்பாலானவர்களை கவர்ந்திருக்கின்றமை நல்ல விடயமே. எனினும், ஜனாதிபதி தேர்தலின் போது எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நான் செயற்பட விரும்பவில்லை. அவ்வாறானதொரு எண்ணம் இதுவரையில் எனக்கு வரவுமில்லை.

ஜே.வி.பி. எப்போதும் அரசாங்கத்தின் நன்மையான செயற்பாடுகளை வரவேற்கும். அதேபோல் அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டவும் ஒரு போதும் தயங்கியதில்லை.

கடந்த காலங்களில் இதனை அனைவரும் நன்றாக உணர்ந்து விட்டனர். நாம் எப்போதும் அரசாங்கத்தை ஜனநாயக பாதையில் இட்டுச் செல்ல வலியுறுத்தும் கட்சியாகவே இருக்க விரும்புகின்றோம்.

ஜே.வி.பி.யும் சுயநல அரசியலிலும் குதித்தால் இந்த நாட்டு மக்களை எவராலும் காப்பாற்ற முடியாது போய்விடும். அவ்வாறானதொரு தவறினை ஒரு போதும் செய்யமாட்டோம்.

அதேபோல் தீர்மானிக்கும் சக்தியாக செயற்பட்டு வரும் நாம் நாட்டிற்கும் மக்களுக்கும் சாதகமான வகையில் ஏதேனும் தீர்மானமிக்க முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமாயின் அப்போது பொது எதிர்க்கட்சியை ஆதரிப்பது தொடர்பில் யோசிப்போம்.

மேலும், நாட்டில் மூவின மக்களின் பிரச்சினைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. தமிழ் மக்கள் உரிமைகளுக்காக போராடு கின்றனர். சிங்கள மக்கள் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி அதற்காக போராடுகின்றனர். முஸ்லிம் மக்கள் தமது அடக்கு முறைகளில் இருந்து வெளிவர போராடுகின்றனர். இவை அனைத்தையும் தீர்க்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்குள்ளது.

அதேபோல் ஜனநாயகத்தை நாட்டில் நிலைநாட்ட வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, இவை தொடர்பில் தொடர்ந்தும் வலியுறுத்தி ஜே.வி.பி. போராடும். போராட்டம் ஒன்றே தீர்விற்கு வழி எனவும் அவர் தெரிவித்தார். (2)

# பெண்களுக்கு எதிரான கொடுமைகளை எடுத்துரைக்கும் கருத்தாய்வு மாநாடு

பிரித்தானிய தமிழர் பேரவையும் அனைத்துக் கட்சிப் பாராளுமன்றக் குழுவும் இணைந்து, இலங்கையில் இலங்கை இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்கள் மீது மேற கொள்ளப்படும் பாலியல் வன் கொடுமைகளை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கும் கருத்தாய்வு மாநாடு, கடந்த 13 ஆம் திகதி பிரித்தானிய பாராளுமன்றத்தில் பல மனித உரிமை அமைப்புகளின் ஆதரவுடன் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டும் இலங்கையில் யுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழ்ப் பெண்களுக்கு எதிராக இலங்கை இராணுவத்தினரால் தொடர்ச்சியாக பாலியல் வன்முறைகள் நடைபெற்று வருகின்றன என்பதனை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தும் முகமாக கலந்துரையாடப்பட்டது. இம் மாநாட்டை தமிழர்களுக்கான அனைத்துக் கட்சிப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் தொடக்கி வைத்து உரையாற்றுகையில்,

வடக்குக் கிழக்கில் நடைபெற்ற யுத்தத்தில் இலட்சக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும் மக்கள் கடத்தப்பட்டும் காணாமல் போயுள்ளனர் என்பதுடன் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டும், தமிழ்ப் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் பாதுகாப்புப் படைகளால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், ஊடக சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன் மக்கள் திசை திருப்பப்பட்டு வருகிறார்கள் இதற்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் தமிழர்களை யுத்தத் தவிர்ப்பு வலயம் என அழைத்து யுத்தக் குற்றம் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களையும் செய்துள்ளனர்.

ஆதாரமாக சனல்-4, இலங்கையின் கொலைக்களங்கள் என்ற ஒரு உலகப்பரிசு பெறும் ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளது. அதில் தமிழ்ப் பெண்கள் ஆடைகள் அகற்றப்பட்டு பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டு நாட்டினுடைய பாதுகாப்புப் படைகளால் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிராகவும் மனித உரிமைகளுக்கு எதிராகவும் நடத்தப்படும் வன்முறைகள் இன்னும் முடிவடையவில்லை எனக் கூறியதுடன், இவற்றிற்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்பதாகவும் உறுதியளித்திருந்தார்.

தமிழ்மக்களாகிய நாம் இவற்றைக் கருத்தில் கொண்டு தாயகத்தில் அவதிப்படும் பெண்களையும் எமது உறவுகளையும் பாதுகாக்க மே 18 ரவல்கர் சதுக்கத்தில் ஒன்று திரளுமாறு பிரித்தானிய தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 80 |
| தக்காளி | 130 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 55 | 50 | 60 |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 60 | 40 | 60 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 110 | 100 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 |
| பாகற்காய் | 160 | 180 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 60 | 50 |
| பயற்றங்காய் | 30 | 70 | 50 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 60 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 70-100 | 140 | 60 |
| போஞ்சி | — | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | — |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 140 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-50 | 40 | 25-30 |
| இராசவள்ளி | 80 | 100 | 80 |

# ராஜரட்ணத்தின் நிதிமோசடியுடன் ரவி எம்.பிக்கும் தொடர்பாம்

(கொழும்பு)

அமெரிக்கா வாழ் தமிழ் வர்த்தகரான ராஜ் ராஜரட்ணத்தின் நிதி மோசடி நடவடிக்கைகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கு தொடர்பிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அந்நியச் செலாவணி மோசடி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மீதான வழக்கொன்று நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் அவருக்கு சட்டவிரோத பணபரிவர்த்தனை ஊடாக பணம் அனுப்பியவர் அமெரிக்க வர்த்தகரான ராஜ் ராஜரட்ணம் என்பது தற்போது தெரிய வந்துள்ளது. இச்சம்பவம் 2006 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் ஏனைய மூன்று பேரின் வேண்டுகோளுக்கு இணங்க வர்த்தகர் ராஜ் ராஜரட்ணம் சுமார் 39 கோடி ரூபாவை சட்டவிரோத பணபரிவர்த்தனை மூலம் இலங்கைக்கு அனுப்பியுள்ளார்.

இது தொடர்பான தகவலை அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுப் பிரிவின் மேலதிக பணிப்பாளர் குமார பெரேரா நீதிமன்றத்தில் அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.


இதே ராஜரட்ணம் என்பவர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு சட்டவிரோதமான முறையில் பணம் அனுப்பியதாக குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# (f) பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (16)

ஐங்கரன் சிவாஸ்கந்தன்




பர்ஷான் பதுல்



அபி றேகா




Like.Comment...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவுசெய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பிறந்த எண் 01 இல் கூட்டெண் 07 இன் பலன்கள்

04

### தோற்றம்

இவர்கள் சூரியனும் கேதுவும் இணைந்துதரும் பலனை அடைவர். தூய நல்லாடை உடுத்தி கௌரவமாகக் காட்சியளிப்பர். உயரமாக ஒல்லியாக உடலிருக்கும். கண்கள் உள்ளடங்கிகூர்மையான பார்வைகொண்டிருப்பர். மூக்கு எடுப்பாக நுனி கூர்மையாக அமைந்திருக்கும். அநேகர் கண்ணாடி அணிந்திருப்பர். தலைமுடி அடர்த்தியாக இருக்கும்.

### குணம்


விதி, சட்டம், நீதி ஆகிய கட்டுப்பாடுகளை மீற எண்ணியவாறே கட்டுப்பட்டிருப்பர். நகைச்சுவை உணர்வு இருக்கும். மனோவலிமை அதிகம். இரகசியத்தைக் காப்பாற்றி காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவர். தவறிழைத்தார் எனத் தெரிந்தால் மெல்லக்கழற்றி விட்டுவிடுவர். அச்சமும் தயக்கமும் உள்ளவர். அசாத்தியமான மூளை படைத்த சாமர்த்தியசாலி. அதிஷ்டமும் சிறுவயதிலிருந்தே உதவும். தமக்கு அடங்கியவர் எனில் தவறு செய்யும் போது சத்தம் போட்டு கண்டிப்பர். அரசியலில், பத்திரிகையில், சினிமாவில் ஈடுபடும் ஆசையுள்ளவர். பல சங்கதிகளில் நுனிப்புல் மேய்பவராகவே இருப்பர். நல்ல நிர்வாகத் திறமை இருக்கும். யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என அறிந்தவர். யாரை எப்படி நடத்த வேண்டும் என்றும் உணர்ந்தவர். இவர்கள் கறாராகப் பேசுவர். சத்தமாகப் பேசுவது பிறருக்குப் பிடிக்காது. இதனால் இவருக்கு உண்மையான நண்பர், நெருக்கமானவர் மிகச் சிலராகவே இருப்பர்.

முகத்துதி செய்தாலும் ஏமாற மாட்டார். சந்தேகப்படுவாரானால் அது சரியாகவே இருக்கும். பார்வைக்கு ஏமாளிபோல இருக்கும் இவர்கள் எல்லாம் அறிந்தவரே. வயதாக ஆக அனுபவங்களிலிருந்து வாழ்க்கைப் பாடமறிந்து விடுவர். ஆன்மிகத்திலும் நாட்டமுண்டாகும். பிறரை நல்ல சங்கதிகளில் மாற்ற முயலுவர். இவ்வகையில் மற்றவர் மேல் ஆதிக்கம் செய்வர். பகைவர் ஏற்படுவர். சிறுவயதிலிருந்து தொடர்ந்து வந்த அதிஷ்டமானவாழ்க்கை நடுவில் சிறுதொய்வை அடையும். பிறகு 28 வயதிலிருந்து மேல்நிலை கிட்டும்.

இவர்கள் உடலமைப்பும் குணமும் மாறி மாறி அமையும். ஒல்லியாக இருப்பவர். கொஞ்சம்தடிமனாவர். ஒட்டிய கன்னங்கள்சதை பிடிக்கும். சுகம், துக்கம், கோபம், தாபம் என வாழ்வும் குணமும் மாறியமையும். காரணம் மனதை வெளிப்படையாகக் காட்ட மாட்டார் என்பதே. தெய்வ நம்பிக்கை தம் தத்துவ மதப் பிடிப்பு இருக்கும். அரசியலில் ஆர்வம் இருக்கும். தீவிரம் இராது. குடும்ப வழக்கம் கட்டுப்பாடுகளை விரும்புவார்.

### குடும்பம்

உறவினருடனும் மனைவியிடமும் கூட கருத்து வேறுபாடிருக்கும். மணமான புதிதில் இல்லற விருப்பு இருந்தாலும் நடு வயதில் விரக்தி தோன்றும். தாம் எதிர்பார்க்கிறவாறு எல்லாம் இருக்க விரும்புவராதலால் அனைவரிடமும் அதிருப்திஏற்படும். சொத்துசுகம் உண்டு. அதிகப் புத்திரப்பேறில்லை. சண்டையும் சச்சரவுமாகவே குடும்ப வாழ்க்கை நடக்கும். குழந்தைகள் நல்ல நிலையடைவர். சிலருக்கு இரு மனைவியரமைவர்.



### தொழில்

சிறு வயதிலேயே வேலைக்குப்போவர். பெரிய மனிதர்களின்ஆதரவு கிட்டும். சொந்தத் தொழிலில் ஈடுபடுவோரும் நல்ல நிலைமையடைவர். சிலர் வேலையைப் பாதியில் விட்டுவிடுவர். பல வேலைகளில் மாறுவர். நடு வயதுக்கு மேல் வறுமை உண்டாகும். குறிப்பிட்ட வேலையின்றியும் இருப்பர். எழுத்து பத்திரிகை சினிமாத் துறைகளில் மிகப் புகழுடன் விளங்கு வோரும் உண்டு. மனசாட்சிக்கு உட்பட்டு நடப்பர். எரிபொருளும் மின்சாரமும் உலோகமும் தொடர்புள்ள வேலைகளில் சிறந்து விளங்குவர். இடைத்தரகராக மத அமைப்புகளில் முக்கியமானவராக விளங்குவர். பாத்திரக்கடை, விளக்கு, மண்ணெண்ணெய் வியாபாரம் செய்பவராகவும் இருப்பர்.

### நோய்

வெப்பம் அதிகமாதலால் பித்த நோய்கள். துர் நீர் சேருதல், தோல் வியாதிகள், மலச்சிக்கல், வாத நோய், மூலம், வயிற்றுக் கோளாறுகள் ஏற்படும். தலை வலி, கண்நோயும் வரும்.

# உங்கள் பிறந்த எண் 01 இல் கூட்டெண் 08 இன் பலன்கள்

### தோற்றம்

இதுசூரியனுடன் சனி இணைந்து தரும் பலன். அளவான உயரமிருக்கும் உடல் பலத்துடன் கட்டாக இருக்கும். மூக்கு நுனி பருத்து இருக்கும். நீண்டுமிருக்கும். கழுத்து கனத்துச் சின்னதாக இருக்கும். தாடை உறுதியாக இருக்கும். சிரித்த முகம் இருக்கும். வரிசையான பற்கள் சதுரமாக அமைந்திருக்கும். அழகாக இருப்பர். முடி சுருண்டிருக்கும்.

### குணம்

இரக்கக் குணம் இருக்கும். பிறர் பசி பொறுக்க மாட்டார். தயாள மனத்துடன் தாராளமாக தானம்செய்வார். உடலில் பலம் இருக்கும். நன்கு உழைப்பர். துணிவும் இருக்கும். வாழ்க்கையில் உண்டாகும் தடைகளை, துன்பங்களை நன்றாகத் தாங்கி எதிர்நீச்சல் போடுவர். வாக்குத் தவற மாட்டார். மிகவும்பணிவாகநடப்பர். பெரியவர்களை மதிப்பர். தர்மத்தை மீற மாட்டார். இவர்களுக்கு பகைவர் அதிகமாக இருப்பர். எந்த வெற்றியும் சுலபமாக கிடைத்திடாது. பிறக்கு பல உதவிகளைப்பணமாகவும்உடல்உழைப்பாகவும் தருவர். மிகவும் அமைதியை நாடுவர். ஆனாலும் சுறுசுறுப்பாக வேலை புரிவர். மிகவும் கண்டிப்புடன் வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனப் பேசி நடப்பர். இதனால் விசுவாசமற்ற பலர் அஞ்சுவர். பலர் ஏமாற்ற இவருடைய இரக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளுவர். தமக்கு உதவியவரை ஒருநாளும் மறவார். நல்லவர் என்ற பெயரை வாங்க பாடுபடுவர். மனதில் எதையும் மறைக்காமல் பழிச்சென்று போட்டு உடைத்து விடுவார். செலவாளியான இவர்கள் செல்வம் சேர்ப்பதிலும் மன்னர். பழிவாங்கியே தீருவர். இவர்கள் காலை மிதித்தவரை சும்மா விட மாட்டார். பிற்காலத்தில் சில பழிகளை அடைவர். பொருளழிவு ஏற்படும். விபத்துக்களும் உண்டாகும். முடிபு திடீரென உண்டாகும். காரிய சித்தி உள்ளவர். நினைத்ததை முடிக்க முயலுபவர் பொதுக் காரியங்க ளில் ஈடுபட்டு உழைப்பர். போராடுவர். சிறுவயதில் விளையாட்டும் படிப்பும் சுக ஈடுபாடும் இருக்கும். காதல் புரிவர். காதல் கலாட்டா கல்யாணம் ஆகும். பழகுவதற்கு மிக இனிமையானவர். தப்பான இடத்தில் மோதி விட்டால் மிக முரட்டுத்தனமாக நடப்பர். அசாத்திய கோபமும் வரும். வெளியே சொல்லக் கூடாதவற்றை அப்படியே மனத்துள் போட்டு புதைத்து விடுவர்.

### குடும்பம்

இவர்களின் சிறுவயது வாழ்க்கை சிறப்பாக கல்வி செல்வ செழிப்பில் தந்தை ஆதரவில் நன்கு நடக்கும். சிறுவயதில் எதிர்ப்பாலினரிடம்ஈடுபாடுஉண்டாகும். முரட்டுத்தனம் அழுகை உண்டு. பிறகு கல்வி சுகத்தடை ஏற்படும். அனைவருமே இவரை ஏய்ப்பர். வெளியில் பயப்படுத்துவது போல நடிப்பர். உள்ளே பகை பாராட்டிக் கெடுக்க எண்ணுவர். பெற்றோரில் யாரையாவது இழந்து விடுவர். படிப்படியாக சோதனைகள் உண்டாகி வாழ்க்கையில் வேதனை வரும். காசு கையில் புரளும். சிறந்த தொழில் திறமை இருக்கும். மிக ஜாலியாக செலவு செய்வர். தமக்கு வேண்டியவரை திருடியாவது வசதியுடன் வாழச் செய்வார். வாழ்க்கையில் விரும்பத்தகாத திருப்பம் வரும். மண வாழ்க்கையில் துணையை இழப்பதோ பிரிவதோ நேரும். வம்புகள் தொழிலில் இருக்கும். போட்டிகள் உண்டு. நன்றி மறந்தவராலும் இவரால் பாதிக்கப்பட்டவராலும் கேடுகள் உண்டாகும். நிம்மதி நிலைக்காது.

### தொழில்

சனி பலம் அதிகம் எனில் கல்வி கெடக் கூலி வேலையில் வாழ்க்கை தொடங்கும். சூரியன் பலம் மிகுமானால் கற்பர். பிதுரார்ஜித சொத்தைச் செலவு செய்வர். சொந்தத் தொழில் புரிவர். அரசியல் சினிமாவில் இடம் பெற்றால் பெருநிலை அடைவர். இரும்பு, எரிபொருள், மின்சாரம் தொடர்பான வேலை கிட்டும். இது தொடர்பான வியாபாரமும் செய்பவராகலாம். மிகப்பலர் தொழிற்சாலைகளில் பணி புரிவர். எலக்ட்ரிக் எந்திரப் பொறியியலாளராக விளங்குவர். எத் தொழில் புரியினும் நிறையச் சம்பாதிப்பர். திறமையுடனும் வேலை செய்வர். புகழ், பொருள் சேரும். ஆயுள் குறையும். வறுமையும் நோயும் சூழ்ந்திருந்தால் நீட்டித்து வாழ்வர்.

### நோய்

ஜூரம், மலச்சிக்கலால் வாதம், மூலம், தலைவலி, வயிற்று வலி உண்டாகும். முதுகு வலி, மூட்டு வலி, சிறுநீரகக் கேடு வரும். அடிக்கடி காயம் படும். தலை, கால் இவற்றில் வடு இருக்கும். சைனஸ் ஏற்படும். சக்கரை வியாதி வரும். வாழ்க்கை திடீரென முடியும்.

கணித்தவர்-ஸ்வாமி- (தொடரும்)

# பாப்பரசரின் இலங்கை விஜயம் பிரிவினைவாதத்திற்கு உரமூட்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை



பாப்பரசர் முதலாம் பிரான்சிஸின் இலங்கைக்கான உத்தேச விஜயத்தின போது வடபகுதிக்கு செல்லக் கூடுமெனவும் அவ்வாறு சென்றால் மன்னார், யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர்களைச சந்திக்க நேரிடும் எனவும் அத்தகையதொரு நிகழ்வு இடம்பெறுமா னால் அந்த இரு ஆயர்களினதும் பிரிவினை வாத செயற்பாடுகளுக்கு உரம் ஊட்டுவதாக அமைந்து விடும் என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தருவதாக பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் தெரிவித்துள்ளதையடுத்து நாட்டின் பல்வேறு சமூகத் தளங்களில் பல்வேறுபட்ட கருத்துகளும் எதிர்ப்புகளும் எழுந்த வண்ணம் உள்ளன.

இது தொடர்பில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் கே.எம். வசந்த பண்டார தெரிவிக்கையில்,

உலக கிறிஸ்தவர்களின் பாப்பரசர இலங்கையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வதிக்க வருவாராயின் அது இலங்கையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு கிடைக்கப்பெற்ற அரியவாய்ப்பாகும்.

ஆனால் இலங்கைக்கு வருகை தரும் பாப்பரசர் மதவழிபாடு என்ற போர்வையில் சர்வதேச நிகழ்ச்சி நிரலை செயற்படுத்துவதற்காகத்தான் வருகிறாரோ என்ற சந்தேகம் எம்முன் எழுந்துள்ளது.

கடந்த சில தினங்களுக்குமுன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பாப்பரசர் இலங்கையில் மதப் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் தமது வருகைக்கு முன் அப் பிரச்சினைகள் தீர்க்கப் படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இதனால் இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வதிக்க வரும் பாப்பரசர் பிரான்சிஸ் அரசியல் திட்ட வரைபுடனேயே வரப்போகிறார் என்பது குறித்து எமக்கு சந்தேகம் எழுகின்றது.

பாப்பரசர் கூறுவது போன்று இலங்கையில் மதப் பிரச்சினை யேதும மக்கள் மத்தியில் கிடையாது.

எதிர்வரும் ஜூன் மாதத்திலிருந்து சர்வதேச நிகழ்ச்சி நிரலின் கீழ் இலங்கையின் நல்லிணக்க விவகாரங்களில் சர்வதேச நாடுகள் நேரடியாகத் தலையிட ஆரம்பிக்கின்றன.

அதாவது இலங்கையில் நல்லிணக்க விவகாரங்கள் தொடர்பில் தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழு இலங்கை வரவுள்ளது. ஜூன் மாதம் ஆரம்பிக்கத் தொடங்கும் சர்வதேச நாடுகளின் நேரடித் தலையீடு எதிர்வரும் ஜனவரி மாதம் வரை தொடச்சியாக நீடிக்கும்.

பாப்பரசரின் வருகை வரை சர்வதேச நேரடி தலையீடு நீடிக்கும். அத்துடன் இலங்கையில் மதப் பிரச்சினை தொடர்பில் கடுமையான விமர்சனமொன்றை விமர்சித்து விட்டு இலங்கை வரவிருக்கும் பாப்பரசர் சர்வதேச நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தவுள்ளார்.

இவரின் வருகை இலங்கையில் சர்வதேச நிகழ்ச்சி நிரலின் உச்சக்கட்ட இலக்கைப் பூர்த்தி செய்வதாகவே அமையும்.

கூரான கத்தியைக் கொண்டு காய்கறியும் வெட்டலாம் , கழுத்தையும வெட்டலாம். பாப்பரசரின் இலங்கை விஜயம் கிறிஸ்தவ மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யலாம்.

அதேவேளை இலங்கை யின் அரசியல் செயற்பாடுகளில் பாதிப்பினையும் ஏற்படுத்தலாம்.

ஆனால் பாப்பரசர் 90 சதவீதம் அரசியல்திட்ட வரைபுடனேயே வருகிறாரென்பது அண்மையில் அவர் வெளியிட்ட கருத்துகளில் தெளிவாகத் தெரிகின்றது.

அத்துடன் பாப்பரசர்களில் முதலாம் பிரான்சிஸ் சற்று வேறுபட்டவர் என்பதும் அவர் சிவில் சமூகத்தின் மத்தியில் தமது மத சேவைகளைக் கொண்டு செல்கின்றாரென்பதும் அனைவரும்




அறிந்ததொரு விடயமாகும்.

அந்த வகையில் இலங்கைக்கு வருகை தரும் பாப்பரசர் வட பகுதிககுச் சென்று அங்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தையும் சந்தித்துப் பேசலாம்.

இச்சந்திப்பு இராயப்பு ஜோசப் மற்றும் தோமஸ் சௌந்தரநாயகத்தினால் முன்னெடுக்கப்படும் பிரிவினைவாத செயற்பாடுகளுக்கு போசாக்களிக்கலாம். இறுதியில் அரசாங்கமும் மக்களும் கைகட்டி வாய்பொத்தி நிற்க வேண்டிய நிலை ஏற்படும் என அவர் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



**நா**மக்கல்லிலிருந்து 40 கிலோ மீற்றர் தொலைவில். பச்சைப் போர்வையைப் போர்த்தியதுபோல் நீண்டு இருக்கும மலைதான் கொல்லிமலைத் தொடர். கடல் மட்டத்தில் இருந்து 1.190 மீற்றர் உயர்ந்து நிற்கிறது. "ஒரு யானையின் ஓடைப்பொன் ஏக்கத்தைப் போக்குவதற்காகப் புதையலைத் தேடிவந்து இப்படி ஓர் ஆபத்தில் மாட்டிக்கொண்டோமே" என நினைத்தார் தாத்தா.

மைதிலியின் இதயம் குதிரையின் வேகத்தில் அடித்துக்கொண்டது. வாசுவோ வியர்வைக் குளியல் நடத்தி இருந்தான்.

செடிகளின் மறைவில் பதுங்கி உட்கார்ந்துகொண்டு. எதிரே அசையும் புதரை அச்சத்தோடு பார்த்தார்கள். அடுத்த விநாடியல் குபீர் என்று பெரிய காட்டுமான் ஒன்று புதரை விலக்கிக்கொண்டு வெளியே பாய்ந்தது. பாதையைக் குறுக்காகக் கடந்து காட்டுக்குள் ஓடி மறைந்தது.

அது பாய்ந்தபோது வாசுவுக்கு மிக அருகாமையில் தாவிச்சென்றது. அதன் மீது மூலிகை வாசம் வீசியதை உணர்ந்தான். நல்லவேளை... அது மட்டும் அவன் மீது காலை ஊன்றி இருந்தால்? நினைக்கவே பயமாக இருந்தது.

அனைவரும் சமாளித்துக்கொண்டு எழுந்து நின்றார்கள். "சே! புலி. சிறுத்தையோனு பயந்துட்டேன்" என்றான் ஆறுமுகம்.

"புலி. சிறுத்தை இல்லைன்னாலும் வேற ஆபத்துகள் இருக்கிற மாதிரி தெரியுது" என்றாள் மைதிலி.

"இது காட்டுப்பகுதி. இங்கே எந்த நேரத்தில் எது மாதிரியான ஆபத்து வரும் என்று சொல்ல முடியாது. எச்சரிக்கையோடு இருக்கணும்" என்றார் தாத்தா.

"வாங்க. சீக்கிரமா மூசோ தாத்தாவைப் பார்க்கப் போகலாம்" என்று நடக்க ஆரம்பித்தான் ஆறுமுகம்.

ஒற்றையடிப் பாதை வளைந்து வளைந்து சென்றது. காலடியில் பலவிதமான வண்ணங்களில் இலைகள். சருகுகள் விழுந்து மெத் என்ற தரை விரிப்பை விரித்து இருந்தன. பாதை ஏற்ற இறக்கமாக இருந்தது. மூச்சு வாங்கியபடியே நடந்தார்கள்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு. "அதோ தெரியுது பாருங்க. அதுதான் பாம்பாட்டிச் சித்தர் குகை" என்றான் ஆறுமுகம்.

"பாம்பாட்டிச் சித்தரா?" என்றாள் மைதிலி.



## கொல்லிமலைப் புதையல்!

"ஆமா. "ஆடு பாம்பே... விளையாடு பாம்பே"னு பாட்டு கேட்டு இருப்பியே. அதை எழுதினவர். குண்டலினி சக்தியைப் பாம்பாக உருவகம் பண்ணிப் பாடல்கள் பாடி இருக்கார்" என்றார் தாத்தா.

"அவரு இந்தக் காட்டுல தவம் பண்ணி இருக்கார். அவருக்குப் பல சித்துக்கள் தெரியும்.

தன் உடம்பில் இருந்து பிரிந்து. செத்துப்போன இன்னொரு உடம்புக்குள் பாய்வாராம். அந்த உடம்பு எழுந்து நடக்குமாம். இவரோட உடம்பு செத்துப்போன மாதிரி கெடக்குமாம். இதை எல்லாம் மூசோ தாத்தா சொல்லி இருக்கார்" என்றான் ஆறுமுகம்.

"ஹய் டுப்பு. இப்படிக்கூட நடக்குமா தாத்தா?" என்றான் வாசு.

"மிகப் பெரிய சித்தர்கள். மகான்கள் அவசியமானபோது இப்படிச் சித்து விளையாட்டை நடத்தி இருக்காங்க. இதைக் 'கூடுவிட்டுக் கூடு பாய்வது"னு சொல்வாங்க. இதைப் பத்தி அப்புறம் விளக்கமாச் சொல்றேன். இப்போ. குகைக்குள்ளே போய் தரிசனம் செய்துக்குவோம்"" என்றார் தாத்தா.

பாம்பாட்டிச் சித்தர் குகையைத் தரிசனம் செய்துவிட்டு. ஒற்றையடிப் பாதையில் நடக்க ஆரம்பித்தனர்.

"மூசோ தாத்தாவைப் பத்தி ஏதோ கதை இருக்குன்னு சொன்னியே அது என்ன?" என்றார் தாத்தா.

"ஓ. சொல்றேன். மூசோ தாத்தாவோட அப்பா. தாத்தா எல்லோருமே எட்டுக்கை அம்மன் கோயில் பூசாரியா இருந்தவங்க. அவங்களுக்கு மந்திரம் தெரியும்.

இந்தக் காட்டின் பழங்குடி மக்களுக்கு மாய மந்திரங்களில் அதிகமான நம்பிக்கை. வேட்டைக்குப் போறப்ப நல்ல சகுனம் இல்லேன்னா திரும்பிடுவாங்க" என்றான் ஆறுமுகம்.

"அந்தக் காலத்துல ராஜாக்கள் எதிரி நாட்டோட சண்டைக்குப் போகும்போது சகுனம் பார்ப்பாங்க. "உன்னம்"னு ஒரு மரம். அது இலைகளை உதிர்த்துட்டு மொட்டையா இருந்தா. போரில் தோல்வி வருமாம்.

அதே மரம் இலைகளுடன் பச்சைப் பசேல்னு இருந்தா. வெற்றி கிடைக்கும்னு நம்பினாங்களாம்" என்றார் தாத்தா.


"அதே மாதிரி பழங்குடி மக்கள் மலையில் ஏறித் தேன் எடுக்கப் போகும் போது. பல்லி எந்தப் பக்கம் குரல் கொடுக்குதுனு கேட்பாங்க. அது நல்ல திசையா இருந்தா தொழிலுக்குப் போவாங்க. இல்லேன்னா அடுத்த நாள்தான். வேட்டைக்குப் போகும்போது. தாத்தா மந்திரிச்ச கறுப்புக் கயிறை ஆண்கள் கையில கட்டிவிடுவார்.

அது இருந்தா. வேட்டையில அவங்களுக்கு மான். காட்டுப் பன்றி எல்லாம் கிடைக்கும். அதோடு புலி. சிறுத்தை. கரடி எல்லாம் அவங்க இருக்கிற பக்கமே வராதாம்.

மூசோவோட மந்திரக் கயிறு அந்த விலங்குகளை விரட்டிருமாம். அதே மாதிரி ஆத்துல மீன் பிடிக்கப் போறவங்க மூசோ தாத்தா கொடுக்கும் மந்திரிச்ச எண்ணெயைத் தடவிக்கிட்டு ஆத்துல இறங்கினா. முதலை அவங்களைக் கடிக்காதாம்" என்றான் ஆறுமுகம். "சரி விடயத்துக்கு வா. மூசோவைப் பத்தி சொல்லு" என்று தூண்டினரர் தாத்தா.

"இப்படி ஒரு காலத்துல கொடிகட்டிப் பறந்த மூசோவுக்கு சில எதிரிகள் இருந்தாங்க.

அவங்க ஒரு நாள், மூசோ தூங்கிக்கிட்டு இருந்தப்போ அவரோட குடிசைக்கு தீ வெச்சு அவரைக் கொல்லப் பார்த்தாங்க" என்று ஆறுமுகம் சொல்ல. வாசுவும் மைதிலியும் திகிலுடன் அவனைப் பார்த்தார்கள்.





⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘⌘



## நோய் எதிர்ப்பு முறையின் தந்தை எட்வர்ட் ஜென்னர்

எட்வர்ட் ஆண்டனி ஜென்னர் இங்கிலாந்திலுள்ள பெர்க்லி என்ற நகரில் 1749-ஆம் ஆண்டு மே 17-ஆம் திகதி பிறநதார். இவர் இங்கிலாந்து நாட்டு மருத்து வரும் அறிவியலாளரும் ஆவார்.

பெரியம்மை நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடித்ததற்காக ஜென்னர் அறியப்படுகிறார். இவர் நோய் எதிர்ப்பு முறையின் (நிர்ப்பீடனம்) தந்தை என சிறப்பு பெற்றார். இவருடைய கண்டுபிடிப்பு பிற கண்டுபிடிப்புகளைக் காட்டிலும் மனித உயிர்களை கொடிய நோயிலிருநது காப்பாற்ற உதவியது.

ஏழாண்டுகள் அறுவைச் சிகிச்சைப் பயிற்சியின் பின் ஒரு சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுனராகத் தேர்ந்தார். அந்த சமயத்தில் பண்ணை மக்களிடையே நிலவிய ஒரு நம்பிக்கை ஜென்னருக்கு அம்மை நோய்க்கு மருந்து கண்டறிய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தது. "கௌபாக்சு" எனப்படும் பசுக்களின் மடிக்காம்புகளை புண்ணாக்கும் ஒரு நோய ஒரு மனிதனுக்கு ஒரு தடவை ஏற்பட்டு விட்டால் அதே மனிதனுக்கு பெரியம்மை நோய வராது என்பதுதான் அந்த நம்பிக்கை.

எனவே பெரியம்மை நோய் வராமல் தடுக்க "கௌபாக்சு" நோயை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் நம்பினர். அதற்காக சுமார் இருபது ஆண்டுகள் விடாமல் பல்வேறு ஆராய்ச்சிகளை செய்தார்.

1796-ஆம் ஆண்டு மே 14-ஆம் திகதி தனது தோட்டக்காரரின் மகனான ஜேம்ஸ் பிப்ஸ் என்ற எட்டு வயது சிறுவனுக்கு அம்மைக்கான தடுப்பூசி போட எத்தனித்தார் ஜென்னர். சாரான நில்மெசு என்ற பண்ணைப் பெண்ணின் கையிலிருந்த கௌபாக்சு கொப்புளத்திலிருந்து எடுத்த பாலை ஊசி மூலம் ஜேம்ஸ் பிப்ஸின் உடலுக்குள் செலுத்தினார். எதிர்பார்த்தது போலவே அச்சிறுவனுக்கு கௌபாக்சு நோய் ஏற்பட்டது. ஆனால விரைவில் குணமடைந்தான்.

சில வாரங்கள் கழித்து பெரியம்மை கிருமியான அம்மைப் பாலை ஊசி மூலம் அதே சிறுவனுக்கு செலுத்தினார். ஆனால் ஜென்னர் சற்றும் மனம் தளராமல் அந்த தடுப்பூசியை சிறுவனுக்குக் குத்தினார். கிராம வாசிகள் எண்ணியதைப் போலவே, ஜென்னர் ஆராய்ச்சி செய்து உறுதிப்படுத்தியது போலவே அந்த சிறுவனுக்கு பெரியம்மை நோய் ஏற்படவில்லை. சிறுவனை இரகசியமான முறையில் பெற்றோரின் அனுமதியின்றி, சிறுவனுக்கு தெரியப்படுத்தாமல் இப்பரிசோதனையை அவர் மேற்கொண்டமையை தற்போது மருத்துவ ஒழுக்கவியல் தவறான அணுகுமுறை என சுட்டிக்காட்டுகிறது. ஆயினும், அம்மைக்கான தடுப்பூசி கிடைத்துவிட்டது என்பதை உறுதி செய்தமைக்கும், ஜேம்ஸ் பிப்ஸ் என்ற அந்த சிறுவனுக்கும் மருத்துவ வரலாற்றில் அழியா இடம் கிடைத்தது.

அவரின் கண்டுபிடிப்புக்கும் சேவைக்குமாக பிரித்தானிய அரசின் பரிசில்களையும் விருதுகளையும் பெற்றார். இயற்கையை அளவில்லாமல் நேசித்த ஜென்னர் தனது கண்டுபிடிப்புக்கு காப்புரிமை பெற நினைக்காமல் அதனை உலகுக்கு இலவசமாக வழங்கினார். ஏழை எளியவர்களுக்கு இலவசமாக அம்மைக் குத்தினார். ஒவ்வொரு நாளும் அவரின் மருத்துவ அறைக்கு முன் முன்னூறு ஏழை மக்கள் வரை வரிசை பிடித்து நின்று அம்மைக்கான தடுப்பூசியை போட்டுக்கொண்டனர்.

1823-ஆம் ஆண்டு பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட இவர் ஜனவரி 26-ஆம் திகதி தனது 73-ஆவது அகவையில் காலமானார்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1498 - வாஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக் கோட்டை அடைந்தார்.
- 1521 - பக்கிங்ஹாமின் மூன்றாவது நிலை சீமானான (Duke) எட்வேர்ட் ஸ்டாஃபேர்ட் தூக்கிலிடப்பட்டான்.
- 1590 - டென்மார்க்கின் ஆன் ஸ்கொட்லாந்து அரசியாக முடிசூடினாள்.
- 1792 - நியூ யோர்க் பங்குச் சந்தை ஆரம்பிக்கப்பட்டது.
- 1809 - பிரெஞ்சுப் பேரரசுடன் இத்தாலியின் திருச்சபை நாடுகளை இணைக்க முதலாம் நெப்போலியன் ஆணையிட்டான்.
- 1814 - நோர்வே நாட்டின் அரசியல் நிர்ணயம் அமைக்கப்பட்டது.
- 1846 - அடொல்ஃப் சாக்ஸ் என்பவரால் சாக்சபோன் வடிவமைக்கப்பட்டது.
- 1865 - அனைத்துலகத் தொலைத் தொடர்பு மையம் ஏற்படுத்தப்பட்டது. இது பின்னர் அனைத்துலகத் தொலைத்தகவல் தொடர்பு மையம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1915 - பிரித்தானியாவின் கடைசி லிபரல் கட்சி ஆட்சி வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரைக் கைப்பற்றியது.
- 1969 - சோவியத்தின் வெனேரா 6 விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்துள் சென்று வீனசில் மோத முன்னர் வளிமண்டலத் தரவுகளை பூமிக்கு அனுப்பியது.
- 1983 - லெபனானில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவதற்கான உடன்பாடு லெபனான், இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றுக்கிடையில் எட்டப்பட்டது.
- 2006 - தமிழ்த் தொலைக்காட்சி நடிகை ஷ்ரத்தா விஸ்வநாதன் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.
- 2009 - தமிழினப் படுகொலை நாள். வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் இலங்கை அரசபடைகளால் படுகொலை செய்யப்பட்டனர். நான்காம் கட்ட ஈழப்போர் முடிவுக்கு வந்தது.

**பிறப்புகள்**

- **1749 - எட்வர்ட் ஜென்னர் - ஆங்கில மருத்துவ ஆராய்ச்சியாளர் (இ. 1823)**
- 1920 - பி. சாந்தகுமாரி, நடிகை, பாடகி
- 1974 - செந்தில் ராமமூர்த்தி. அமெரிக்க நடிகர்

**இறப்புகள்**


- 2007 - நகுலன், தமிழ் எழுத்தாளர்

**சிறப்பு நாள்**

உலகத் தொலைத்தகவல் தொடர்பு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



43

நான் எழுத்தாளரா இல்லாமப் போயிட்டாலும் பரவாயில்லை; நல்ல மனுஷியா இருக்கணும்- இது சிவசங்கரி.

எத்தனை பெரிய சத்திய வார்த்தைகள்!

பயிற்சியும் முயற்சியும் இருந்தால்



எழுத்தாளராகிவிட முடியும்.

ஆனால் மனிதனாய் அல்லது மனுஷியாய் இருப்பதற்கு இந்தப் பயிற்சியும் முயற்சியும் மட்டும் போதுமா?

மாஜி எழுத்தாளர் அல்லது மாஜிக் கவிஞர் என்பது கூட இழிவில்லை.

மாஜி மனிதன் அல்லது மாஜி மனுஷி என்பது எத்தனை பெரிய இழிவு?

சிவசங்கரியைப் பேசிக் கொண்டிருந்தாலோ சிவசங்கரியோடு பேசிக் கொண்டிருந்தாலோ புழுதியடங்கப் பெய்யும் மழையில் மண்வாசனை கிளம்புவது மாதிரி, புதிய சிந்தனைகள் புறப்படும் மனசுக்குள்.

இருக்கும் வரைக்கும் எழுத்து- வாழ்க்கை இரண்டிலும் மாஜியாக முடியாத மாதரசி என்றே சிவசங்கரி பற்றிச் சிந்




திக்கிறேன்.

காரணம்-

அவருக்குள் கனலும் அக்கினி.

ஏதோ தீக்குச்சியில் ஊசலாடும் சின்ன நெருப்பல்ல அது.

தோற்றுப் போவதற்காகவே காற்றோடு யுத்தம் செய்யும் மெழுகுவத்தியின் மேனாமினுக்கி நெருப்பல்ல அது.

அது ஒரு நிஜ நெருப்பு.

கண்ணீரை, புன்னகையை, அனுபவங்களை, அவமானங்களை, விருதுகளை, விரக்திகளை, நேற்றை, இன்றை தனக்குப் பெற்றோலாய் ஊற்றிக் கொண்டு மனித நேசத்துக்காய் எரியும் மங்காத நெருப்பு.

என் சமகாலத்தில் பெண் எழுத்தாளர்களில் அதிகம் பேசப்பட்டவரும் பேசியவரும் ஏசப்பட்டவரும் ஏசாதவரும் சிவசங்கரியாய்த்தான் இருக்க முடியும் என்று எண்ணுகிறேன்.

விமர்சனங்கள் பற்றிய அவரது பார்வை அற்புதமானது.

பொறாமை, குற்றச்சாட்டு, வதந்தி- இவைகளெல்லாம் பாராட்டின் வெவ்வேறு வடிவங்கள் என்று விளங்கி வைத்திருக்கிறேன்.

சரி சரி சிவசங்கரி! மிகச் சரி.

இதைப் புரிந்துகொண்ட பிறகு இன்னும் என்னைப் பற்றிய போதுமான பொறாமைகளோ, வதந்திகளோ, குற்றச்சாட்டுகளோ வரவில்லையே என்று வருத்தப்பட ஆரம்பித்தேன்.

சிவசங்கரியிடம் எனக்குப் பிடித்த முதல் விடயம் அவரது எழுத்தல்ல; அவரது தன்னம்பிக்கை.

ஓரத்து அலைகளை உதாசீனம் செய்துவிட்டுச் சமுத்திரத்தில் குதிக்கும் சாமர்த்தியம்.

பதறாத பரபரப்பு-

சுதி மாறாத சுறுசுறுப்பு-

காற்றிலாடும் கீற்றாய் ஒவ்வொரு கணமும் உற்சாகம்-

போர்க்களத்தில் ஒரு கரம் போய் விட்டதா! சரி! ஒரு கரத்தால் யுத்தம் செய்வது எப்படி என்று கற்றுக் கொண்டு அதையும் புத்தகமாக்கிப் போர்க்களத்திலேயே விற்று விடும் புத்திசாலித்தனம்-

எதிராளி யாரையும் உட்கார வைத்து விடும் உயரம்- மனசு துருவும் பார்வை- கொஞ்சம் அதிகமான ஆங்கிலம்- கொஞ்சம் அதிகமான பேச்சு- கொஞ்சம் அதிகமான உரிமை-ஆனால் கொஞ்சமும் அதிகமில்லாத கர்வம்.

இவையெல்லாம் சேர்த்து வரைந்தால்- அது சிவசங்கரி.

படைப்பாளியோடு சேர்த்துப் படைப்புக்களைப் பார்க்கும் மனோபாவம் உலகம் முழுக்க ஊறி இருக்கிறது.

தோல் அழுகியிருந்தால் சதையும் அழுகியிருக்கும் என்பது போல் படைப்பாளி அந்நியமாகிவிட்டால் படைப்பும் அந்நியமாகிவிடுகிறது.

(தொடரும்)

-வைரமுத்து-

# இந்தியத் தேர்தல் களம்: காணாமற்போன அரசியல் நாகரிகம்





...இந்த மக்களவைத் தேர்தலில்மூன்றாவது பெரிய கட்சியாகக் கணிக்கப்படும் ஆம் ஆத்மி கட்சியும் அவதூறுப் பேச்சுக்களை வெளியிடத் தவறவில்லை. அதன் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் உட்பட பல்வேறு தலைவர்களின் பேச்சுக்கள் பல நேரங்களில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன.

அரசியல்வாதிகளை திருடர்கள் என்றும், அயோக்கியர்கள் என்றும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுவதால், மற்றக் கட்சித் தொண்டர்கள் அவரைத் தாக்குவது அதிகரித்து வருகிறது.

அதேபோன்று காஷ்மீர் குறித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்ததால் மற்றொரு தலைவரான பிரஷாந்த் பூஷண் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

உத்தரப் பிரதேசத்தில் போட்டியிடும் அக்கட்சியின் வேட்பாளர் சாஹியா இல்மி, முஸ்லிம்கள் வகுப்புவாதிகளாக மாறவேண்டும் என்று பேசிவிட்டு, பின்னர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

மறுபுறம் ஆம் ஆத்மி தலைவர்கள் செல்லுமிடமெல்லாம் அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்படுவதன் பின்னணியில் பா.ஜ.க. தொண்டர்கள் இருப்பதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. வாய் பேசும் வன்முறை போதாதென்று கையும் சேர்ந்து கொள்வதன் விளைவு இது.

சமாஜ்வாதி கட்சியின் மூத்த தலைவர் அசாம் கான், கார்கில் போரில் முஸ்லிம்கள் கருத்து குறித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டார். ஆனால் அதற்கு மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார்.

தமிழகத்தில் நிலைமையைக் கேட்கவே வேண்டாம். நடப்பது மக்களவைத் தேர்தல் என்றாலும், தி.மு.கவும். அ.தி.மு.கவும் [illegible] மற்றவர் குற்றம்சாட்டத் தவறவில்லை.

ஆனால் தேசிய அளவில் நடக்கும் கூத்துக்களைப் பார்க்கும் தமிழக மக்களுக்குத் தமிழக அரசியல் கட்சிகள் மீது நல்லெண்ணம் வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**இணையத்(ற்ற) அவதூறுகள்**

இது தவிர, சமூக வலைத் தளங்கள் தேர்தல் அரங்கத்தில் ஏற்படுத்தும் சர்ச்சைகள் கணக்கற்றவை. அவை அனைத்தையும் கண்காணிக்க வழி இல்லாததால் அவை ஏற்படுத்திய பாதிப்புகள் அதிகம்.

அதேபோன்று [illegible] போன்ற [illegible] களின் உதவிகளுடன் ஏராளமான சர்ச்சைகளையும் மோதல்களையும் ஏற்படுத்தும் பேச்சுக்கள் உலா வருகின்றன. அவை அனைத்தையும் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.

இப்படிநாடுமுழுவதும்தேர்தலை ஒட்டி நடைபெறும் வேடிக்கைகள் இந்திய வாக்காளர்களின் மனங்களில் அச்சத்தையும் சோர்வையும் ஏற்படுத்தியிருந்தால் அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

வெறுப்பை விதைத்தால் வெறுப்பையே அறுவடை செய்ய முடியும். ஒரு நபரை அளவுக்கு அதிகமாக ஆராதித்தால் அதே நபரை வேறு சிலர் அளவுக்கதிகமாகத் தூற்றுவதும் நடக்கும்.

சராசரி மனித இயல்பின் இத்தகைய வெளிப்பாடுகள் தாம் மக்களுக்கு வழிகாட்டுவதாகக் கூறிக் கொள்ளும் தலைவர்களிடமும் உள்ளன என்பதை வைத்தே தலைவர்களின் தரத்தை உணரலாம்.

வெற்றிமட்டுமேமுக்கியம்என்று நினைப்பவர்கள் அதற்காக எந்த வழிமுறையையும் மேற்கொள்வார்கள். தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்கள் பதற்றத்தில் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். எதிரிகள் பெறும் புகழையும் பாராட்டையும் கண்டு வெதும்புபவர்கள், அவர்கள் புகழைக் குறைக்க எதையும் செய்வார்கள்.


அரசியல் என்பது மக்களுக்குத் தொண்டாற்றும் வழி என்பது ஏட்டளவிலான கூற்றாக நின்று பல காலம் ஆகிறது. தொண்டாற்ற அரசியலும் ஒருவழி என்னும் பக்குவத்தோடு அரசியலில் இருப்பவர்கள் வெற்றிக்காகத் தரம் தாழ்ந்து போக மாட்டார்கள். அரசியல் வெற்றி என்பது பாரதூரமான பல கணக்குகளை உள்ளடக்கிய நவீன மந்திரம்.

இந்த வெற்றியின் மதிப்பு மிகப் பெரிதாகிவிட்டது. எனவே அதற்காக எந்த விலையையும் கொடுக்க எல்லோருமே தயாராகிவிட்டார்கள். அதற்கு உதாரணம் இந்தியத் தேர்தல் களம்.

-இணையம்- (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய சூழலுக்கிணைவான பசுமை தொழில்நுட்பங்கள்-4



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-II

(சென்றவாரத் தொடர்ச்சி...)

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

**மண்புழு உரமும் மண்புழு திரவமும**


பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்படும் அசேதன இரசாயன பசளைகளால் சூழல் மாசடைவதுடன் அவற்றின் பின்விளைவுகளால் மக்கள் பாதிக்கப்படுவதும் ஆய்வு மூலமாக கண்டறியப்பட்டுள்ளது. இதனால்




தான் சேதன விவசாயமுறைகளை மக்கள் மீண்டும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள். சேதன முறை மூலமான பயிர்ச்செய்கையை மக்கள் பயன்படுத்துவதற்கு அதற்கு தேவையான தொழில்நுட்பங்களைத் தெரிந்துகொள்வது நல்லது. வெறுமனே சாணத்தையோ அல்லது கூட்டுரத்தையோ இடுவதால் சேதன் முறையை முழுமையாகப் பயன்படுத்துவதாக அர்த்தமாகாது. பயிர்களுக்கு தேவையான போசாக்கு சத்துக்களை எந்தவிதமாகவோ பயிர்களுக்கு கொடுக்க வேண்டும். திரும்ப திரும்ப ஒரே பயிரை ஒரேயிடத்தில் பயிர் செய்தால் தொடர்ச்சியாக உள்ளிழுக்கப்படும் ஊட்டச்சத்து கிடைக்கும் அளவு குறைந்து விடும். அதனால் ஒரே பயிரை தொடர்ச்சியாக ஒரேயிடத்திலேயே பயிரிடக்கூடாது.

மேலும் இப்பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்து தொடர்ந்து இழக்கப்படுவதனால் அங்கே பசளையிடப்பட வேண்டிய கட்டாயமாகின்றது. இந்த ஊட்டச்சத்து தேவையை நிவர்த்திசெய்வதற்காகவே அசேதன பசளைகள் இடப்படுகின்றன. அப்படியானால் சேதன முறையில் பயிர்செய்யும் போதும் அதேயளவான ஊட்டச்சத்தின் தேவை பயிருக்கு உண்டு என்பதை நாம் மறந்துவடக்கூடாது. அந்த ஊட்டச்சத்து தேவையை இயற்கை முறையில் கிடைக்கும் பொருட்களைக்கொண்டு நாம் நிவர்த்தி செய்ய முயற்சிக்கின்றோம். அதற்காகவே கூட்டுரம் தயாரிப்பு. மண்புழு உரம் மற்றும் மண்புழு திரவம் எனபனவற்றை பயன்படுத்துகின்றோம். மண்புழு உரம் தயாரிப்பில் மேலதிகமாக கிடைப்பதுவே மண்புழு திரவமாகும். இதனைப் பெறுவது பற்றி இன்னும் தொடர்ந்து பார்ப்போம்.

முன்னர் பார்த்தது போல மண்புழு விவசாயியின் சிறந்த நண்பன். மண்புழுக்களை சேதனக் கழிவுகளை உரமாக மாற்ற பயன்படுத்துகின்றார்கள். மண்புழு உரம் பெறுவதற்காக பயன்படுத்தப்படும் மண்புழு வகைகள் சாதாரணமாக எமது மண்ணில் காணப்படுபவையல்ல என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் எமது பிரதேசத்தில் மண்ணில் மட்கு அதிகமாக உள்ள ஈரமான பகுதிகளில் காணப்படுகின்றன. சாதாரணமாக எமது மண்ணில் காணப்படும் மண்புழுக்கள் மண்ணையும் உணவாக உட்கொள்ளும்திறனுடையவை. இதற்கும்மேலாக அவை எமக்கேற்றாற் போல் இனவிருத்தியடையும் வல்லமை மகவும்குறைவாக உள்ளவையாகும். இன் னும் சேதன திண்மக்கழிவை விரைந்து கூட்டுர்மாக்கும் வல்லமையற்றவை. மண்ணல் வாழும் இவ்வகையான மண புழுக்கள் இயற்கையாக சிறிய ளவில் சேதன திண்மக்கழிவை கூட்டுரமாக மாற்றும் திறனுடையவையாதலால் மண்புழு உர தயாரிப்பில் இவற்றினை சேர்த்துக்கொள்வதில்லை. மேலும் மண்ணை உட்கொள்வதால் கூட்டுரத்தில் மண்ணின் சதவீதம் அதிகமாகவும் இருக்கும். சிறந்த கூட்டுரத்தில் மண்ணின் சதவீதம் (5-10%) இற்கும் மேலாக இருக்கக் கூடாது.



மாறாக மண்புழு உரம் தயாரிப்பதற்காக குறிப்பிட்ட வகையான மண்புழுக்களைப் பயன்படுத்துகின்றார்கள். இவை மண்ணின் மேல்படையில் மட்டும் உயிர்வாழ்வன. இவற்றை மேல்படை மண்புழுக்கள் (Epigeic earthworms) என அழைப்பார்கள். இவ்வாறான மண்புழுக்களுக்கு தனித்துவமான இயல்புகளுண்டு. இவற்றையே நாம் மண்புழு வளர்ப்பில் (Vermiculture)அல்லது மண்புழு தொழில்நுட்பத்தில் (Vermitechnology) பயன்படுத்துகின்றோம். இங்கே மேலே குறிப்பிட்ட மேல்படை மண்புழுக்களாக ஐசீனியா பீற்றிடா (*Eisenia foetida*), இயூறில்லசு இயூயீனியே (*Eudrillus eugeniae*) மற்றும் பெரியோனிக்சு எக்ஸ்கவேற்றசு (*Perionyz excavates*) ஆகும். இம்மண்புழுக்களை பயன்படுத்துவதனால் எந்தவிதமான பாதிப்பும் சூழலுக்கோ அல்லது பயன்படுத்தும் விளைநிலத்திற்கோ ஏற்படாது. அதாவது இம் மண்புழுக்களை கொள்கலன்களில் வளர்ப்பதேயன்றி விளை நிலத்தினில் விடுவதேயில்லை என்பதனால் வெற்றிகரமாக இம் மண்புழுக்களை பயன்படுத்தலாம்.

கொள்கலன் ஒன்றில் அடிப்பகுதியை சரிவானதாக ஆக்கிக்கொள்ளவும். இதற்காக அடிப்பகுதியில் சீமெந்து கொங்கிறீற்றினை இட்டு ஒருபக்கம் உயர்வானதாகவும் மறுபக்கம் சரிவானதாகவும் ஆக்கிவிடலாம். கொள்கலனின் அடிப்பகு தியில் பெரிய கற் களும் அதற்கு மேலாக சிறிய கற்களும் இடுதல வேண்டும். அதனுள் உடன் சேகரித்த பசுவின்சாணத்தினை நீரில் கரைத்து சேதன கழிவுகளை பிரட்டி விடவும். ஒருகிழமைக்கு அப்படியே வைத்து விட்டு பின்னர் அதனுள் மண் புழுவினை விடவும் மண் புழுவின் எண்ணிக்கையைப் பொறுத்து சேதன கழிவுகள் கூட்டுரமாக மாறும். இந்த அமைப்பினை பயன் படுத்தியே கழிவுகள் உரமாக மாறும் போது இதற்குள் நீர் தெளித்தால் அந்த நீர் உள்ளுள்ள கூட்டுரமாக மாறிய கழிவுகள் அனைத்தையும் கழுவி வெளிவரும். வெளியிலெடுப்பதற்கு அந்த கொள்கல னின் அடிப்பகுதியில் ஒரு குழாயை பொருத்தி அதன் நுனிப்பகுதியில் வெளி வரும் நீரை கட்டுப்படுத்தும் நிறுத்தியொ ன்றை இணைத்துவிடலாம். தேவை யே ற்படும் போது நிறுத்தியை திறந்து மண்புழு திரவத்தை பெற்றுக்கொள்ளலாம். இங்கே கொள்கலனுக்காக பெரிய பிளாஸ்ரிக் கொள் கலனை பயன்படுத்தலாம். நாம் செய்த ஆராய்ச்சிகளின்படி மண்புழு திரவம் அசேதன இலைப்பசளையான மக்சிகுறொப் (Maxicrop) க்கு இணையாக இருந்ததை உறுதிசெய்துள்ளோம். மாறவில எனுமிட த்திலுள்ள கிறீன் பாம் (Green Farm Pvt Ltd.) எனும் அழகு தாவரங்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் நிறுவனத்தில் மேற்கொண்ட ஆய்வில் இந்த முடிவு பெறப்பட்டது. பல்கலைக்கழகத்தை தொழிற்சாலைகளுடன் இணைத்து செய்யும் ஆய்வில் பெறப்பட்ட இம்முடிவு இன்றும் அந்த நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கே குறிப்பிட்டது சிறிய அளவில் மண்புழு திரவத்தை பெறுவதற்கான வழிமுறையாகும். அதிகமான அளவில் மண்புழு திரவம் தேவைப்படுமானால் சீமெந்தினாலான தொட்டிகளை இதற்காக பயன்படுத்தலாம். உங்கள் சிந்தனையையும் இதறகுள் உள்வாங்குங்களேன்.

தேவைக்கேற்றது போல தொட்டிகளை உருவாக்கிக்கொள்ளலாம். தொட்டிகளுக்கு பதிலாக பிளாஸ்ரிக் சீற்றுக்களைப் பயன்படுத்தியும் தொட்டிபோல அமைத்துக் கொள்ளலாம். எது வசதிப்படுகின்றதோ அதனை அமைத்து பயன்படுத்திக் கொள்ளலாம். செய்து பாருங்கள். உங்களாலும் முடியும்.(தொடரும்)

# இளவரசர் சார்ள்ஸ் இலங்கை விஜயம்

பிரித்தானியாவின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் இவ்வருட இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மாநகர சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவு தின வைபவங்கள் இவ்வருடம் நவம்பர் மாதம் 25ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இக்கொண்டாட்டங்களின் பிரதம விருந்தினராக இளவரசர் சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார் என்று கொழும்பு மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கொண்டாட்டங்களுடன் இணைந்ததாக மாநகர மேயர்களின் மாநாடு ஒனறையும் கொழும்பில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், லீட்ஸ், ஹனோய், மாலே, ஷாங்காய் உள்ளிட்ட உலகின் முக்கிய 25 மாநகரங்களின் நகரபிதாக்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை நகரபிதா முஸம்மிலின் தலைமையிலான விசேட குழுவொன்று மேற்கொண்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு பழைய நகர மண்டபம் புதுப்பிக்கப்படவுள்ளதுடன், அதனை அண்டிய பகுதியை விசேட கொண்டாட்ட வலயமாக அறிவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.(2)

# முகத்தை மூடிய தலைக் கவசத்திற்கு சர்வதேச தரம் பேணப்பட வேண்டும்

## வீதி பாதுகாப்பு தேசியக்குழு பரிந்துரை

இலங்கையில் மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் பயன்படுத்தும் முகத்தை மூடிய தலைக் கவசத்திற்கு சர்வதேசதரம் பேணப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வீதி பாதுகாப்பு தேசியக் குழு இந்த பரிந்துரையை செய்துள்ளது.

அண்மையில் இந்தக்குழு, பொலிஸ் மற்றும் இலங்கை தரச்சான்றிதழ் நிறுவக அதிகாரிகளுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியது. இதன் போது மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் பயன்படுத்தும் தலைக் கவசத்திற்கு எஸ்எல்எஸ் முத்திரை பெறப்பட வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

இதன்படி குறித்த தலைக் கவசங்கள் முழுமையாக முகத்தை மூடிய நிலையில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

எனினும் தலையை முழுமையாகவும் முகத்தில் ஒருபகுதியை மூடியதாகவும் அமைய வேண்டும் என்று இந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முகத்தை முழுமையாக மூடிய தலைக் கவசத்தை பயன்படுத்தி குற்றச் செயலகள் இடம்பெறுவதை தடுக்கும் வகையிலான யோசனைகளும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிலையில் இது தொடர்பில் இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (2)

# இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்து

பாதுகாப்பு படையினருக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் வகையிலான புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் இலங்கையும், சீனாவும் கைச்சாத்திடவுள்ளன பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் சீன இராணுவத்தின் மூன்றாம் நிலை ஜெனரல சூ குயிலி ஏங்க் உள்ளிட்ட குழுவினர் தற்போது இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர். இந்தக் குழுவில் சீன அரசின் முக்கிய அதிகாரிகள் 25 பேர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்நிலையில் இந்தக்குழுவினர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் புதிய பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இந்த ஒப்பந்தங்களின் மூலம் இலங்கை மற்றும் சீன இராணுவத்தினருக்கிடையிலான ஒருங்கிணைந்த செயற்பாடுகள், மேலதிக பயிற்சிகள் என்பவற்றை மேற்கொள்வதற்கு இணக்கப்பாடு ஏற்படும் என்று தெரிய வருகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

# 15.05.2014-14.06.2014



## சிம்மம்

**மகம், பூரம்,
உத்தரம் 1 ஆம் பாதம்**

**விடாமுயற்சியே வெற்றிக்கு வித்திடும் என்று சொல்லும் சிம்ம இராசி நேயர்களே!**

**தெய்வ வழிபாட்டால் மட்டுமே திருப்தி காணவேண்டிய நேரம்!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராயந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தல் ராசிநாதன் சூரியன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். விரயாதிபதி சந்திரன் அவரைப் பார்க்கிறார். எனவே உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. தீவிர முயற்சி செய்வதன் மூலமே திட்டமிட்ட பணிகளை செய்து முடிக்க் இயலும். வருமானப் பற்றாக்குறை ஏற்பட்டு வள்ளல்களின் ஒத்துழைப்பை நாடக் கூடிய சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகும்.

நூதனப் பொருள் சேர்க்கை அதிகரிக்கும். நுண்ணறிவாளர்களின் ஒத்துழைப்போடு எண்ணிய காரியங்களை செய்து முடிப்பீர்கள். சோதனைகளும், வேதனைகளும் மாறுவதற்காக எடுத்த முயற்சிக்கு பிற மதத்தவரின் ஒத்துழைப்பு கிடைக்கும். கன்னி ராசியில் செவ்வாய் சஞ்சரிப்பதும் அதைச் சுக்ரன் பார்ப்பதும் ஒரு வழிக்கு நன்மைதான். சகோதர ஒற்றுமை பலப்படும். பெண் சகோதர வர்க்கத்தினரால் இருந்த பிரச்சினை அகலும். பூர்வீக சொத்துக்கள் பஞ்சாயத்துக்கள் மூலம் பாகப்பிரிவினை செய்து கொள்வீர்கள்.

வக்ரச் சனியின் இயக்கத்தால் எதிரிகளின் பலம் குறையும் என்றாலும் உச்ச சனியாக இருப்பதால் மறைமுக எதிர்ப்புகள் உங்களுக்கு தொடர்ந்து இருந்து கொண்டேஇருக்கும். வாங்கல்-கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டிய நேரமிது. சப்தமாதிபதியாகவும் விளங்கும் சனி வக்ரம் பெறுவதால் குடும்ப பிரச்சினைகளை முற்றவிடாமல் உடனுக்குடன் சரிசெய்து கொள்வது நல்லது.

மாதக் கடைசியில் குருபெயர்ச்சியாகப் போவதால் பிள்ளைகள் வழியில் எதிர்பாராத விரயங்களைச் சந்திக்க நேரிடும். விரய குருவின் ஆதிக்கமும், வக்ரச் சனியின் ஆதிக்கமும் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படுத்தாமலிருக்க வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக வியாழன் தோறும் சனி கவசம் பாடி, சனி பகவானை வழிபட்டு வருவதுடன் வைகாசி விசாகத்தன்று அருகிலிருக்கும் முருகப்பெருமான் ஆலயத்திற்கும் சென்று வழிபட்டு வாருங்கள்.

**மேட சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 24 ஆம் திகதி மேஷ ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். புத்தாடை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்களா. தொழில ரீதியாக எடுத்த முயற்சிக்கும் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். பெற்றோர்களின் பாச மழையில் நனைவீர்களா. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அந்நிய தேசத்திலிருந்து வரும் தகவல் நீங்கள் எண்ணிய எண்ணங்களை எல்லாம் இனிதே நிறை வேற்றும்.

**புதனின் வக்ர இயக்கம்!**

மே 27ஆம் திக்தி ரிஷப ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். தனலாபாதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தைரியமும், தன்னம்பிக்கையும் குறையும். தனவரவில் தடைகள் ஏற்படும். மனதால் நினைத்த காரியத்தை மறு கணமே செய்ய முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். குடும்பத்தில் குழபங்கள் அதிக்ரிக்கும். நண்பர்களால் சில ஏமாற்றங்கள் உருவாகலாம். முடிவான ஒரு சில காரியங்களில் கடைசி நேரத்தில் மாற்றம் ஏற்படலாம். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

**கடக குருவின் சஞ்சாரம்!**


கடக ராசியில் ஜூன் 13ஆம் திகதி குரு சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக திடீர் விரயங்கள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லும். கட்டளைக்கு அடிபணிய பங்குதாரர்கள் மறுப்பர். இட மாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம் போன்றவைகள் ஒருசிலருக்கு உறுதியாகும். கடன் சுமை குறைய புதிய யுக்திகளைக் கையாள்வீர்களா. குருவின் பரிபூரண பார்வை சுக ஸ்தானத்தில பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். வாகனம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் பூர்த்தியாகும். வாகனம் வைத்திருப்பவர்கள் பழைய வாகனத்தை கொடுத்துவிட்டு அதிக நவீன் புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்பதவி கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. உடல் ஆரோக்கியம் சீராகும். இம்மாதம் சிவாலய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிறப்புகள் அனைத்தும் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண வேண்டிய மாதமாகும். புதியவர்களை நம்பிச் செயற்படுவதில் சில வருத்தங்கள் ஏற்படலாம். கணவன்-மனைவிக்குள் பாசம் பொங்கும். நேசம் கூடும். அதே நேரத்தில் பிள்ளைகளால் பிரச்சினைகள் அதிகரிக்கும். விரயங்கள் கூடும். அவர்கள் எடுத்த முடிவிற்கு நீங்கள் சம்மதிக்கும் சூழ்நிலை உருவாகலாம். செவ்வாய் துலாத்திற்கு மாறும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மாதக் கடைசியில் உடல் நலத்திற்கென்று ஒரு தொகையைச் செலவழிக்கும் சூழ்நிலை உருவாகலாம். ஆஞ்சநேயர் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

## தெய்வ வழிபாட்டால் மட்டுமே திருப்தி காண வேண்டிய நேரம்!

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள்,
அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**மனதிற்குள் சிறந்த எண்ணங்ளை வைத்திருக்கும் கன்னி இராசிநேயர்களே!**

**சந்தோஷங்களைச் சந்திக்கும் நேரம்!**

வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். 'கன்னிச் செவ்வாய் கடலும் வற்றும' என்பது பழமொழி. ஒருவருக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாயாக இருந்து அது அம்சத்தில் கன்னியில் இருந்தால் கடலளவு பொருள் இருந்தாலும் எல்லாம் விரயமாகிவிடும் என்பர். அதுமட்டுமல்ல நாட்டிலும் மழை வளம் குறைவாகி வறட்சி தாண்டவமாடும் என்பர்.

அப்படிப்பட்ட வலிமை வாய்ந்த கிரகமான செவ்வாய் உங்கள் ராசியில் சஞ்சரித்தாலும் அதைத் தனாதிபதி சுக்ரன் பார்ப்பதால் செலவிற்கேற்ற பணம் கிடைக்கும். செய்தொழிலில் திடீர். திடீரென ஏற்றமும், இறக்கமும் வந்து கொண்டேயிருக்கும். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மதிப்பும், மரியாதையும் எப்பொழுதும் போல இருக்கும்.

காரியத்தை தொடங்கும் முன்பு காசு, பணம் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயமில்லை. எதை செய்ய நினைத்தர்களோ அதைச செய்ய தொடங்கி விட்டால் உதவிக்கரம் நீட்ட நண்பர்கள் உடனடியாக வந்து சேருவர். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகி மாதக் கடைசியில் வளர்ச்சி ஏற்படும். இதற்கிடையில் உங்கள் ராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சனி பகவான் வக்ரம் பெற்றிருக்கிறார். 5 இற்கு அதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். வரன்கள் வாயில் தேடி வரும் பொழுது அதை ஏற்றுக் கொள்வது தான் நல்லது.

அது சரியில்லை, இது சரியில்லை என்று நட்டிக் கழித்துக் கொண்டே சென்றால் சுபகாரியங்கள் நடைபெறுவதில் மிகுந்த தாமதம் ஏற்பட்டு விடும். என்ன இருந்தாலும் உங்கள் ராசிநாதன் புதன் விரயாதிபதியுடன் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் நல்ல விரயங்களாக மேற்கொள்வதே உகந்தது. துறிப்பாக வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவது நல்லது. உற்றார், உறவினர்களின் இல்ல விழாக்களை முன்னின்று நடத்தி வைக்கலாம். ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணைபுரிய சனிக்கிழமை தோறும் விரதமிருந்து, சனி பகவானை வழிபட்டு வருவது நல்லது.

**மேட சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 24 ஆம் திகதி மேட ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 2, 9 இற்கு அதிபதியான சுக்ரன் 8 இல் மறைவது அவ்வளவு நல்லதல்ல. இருப்பினும் சுக்ரனின் பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும். பக்க பலமாக இருக்கும் நண்பர்கள் உங்கள் செயலுக்கு உறுதுணையாக இருப்பர். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

மே 27ஆம் தேதி புதன் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக ஆரோக்கியக் குறைபாடுகள் அதிகரிக்கும். உற்சாகத்தோடு பணி புரிய முடியவில்லையே என்று கவலைப் படுவீர்கள். மருத்துவச் செலவு கூடும். தன்னம பிக்கையும், தைரியமும் குறையாமல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

ஓராண்டுக்கு ஒருமுறை மாறும் குரு பகவான் தற்சமயம் ஜூன் 13 ஆம் திகதி கடக ராசிக்கு மாற்றம் பெறுகிறார். இந்த குருவின் கடக ராசி சஞ்சாரம் உங்கள் கவலைகளைப் போக்கும் விதத்திலேயே இருக்கிறது. சகாய ஸ்தானத்தைக் குரு பார்க்கப் போகிறார். அப்புறமென்ன, நன்மைகள் படிப்படியாக வந்து சேரப் போகின்றன. தொழில் மாற்றச் சிந்தனைகள் செயலாகும். தொல்லைகள் தீரும். இம்மாதம் அங்காரக வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் தங்கு தடைகள் அகலும். மங்கல ஓசையும் மனையில் கேட்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம், மாதத்தின் முதல் வாரத்தில் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். 2ஆம் வாரத்தில் சேமிப்பு உயரும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். 3 ஆம் வாரத்தில் ஆரோக்கியப் பாதிப்புகள் அடிக்கடி உருவாகலாம். அடுத்தவர் உதவியை எதிர்பார்த்து செய்யும் சூழ்நிலை உருவாகலாம். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்காமல் இருக்க பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகலாம். பிள்ளைகளின் உத்தியோக மாற்றம் உறுதியாகலாம். கன்னி செவவாய்க்கு பரிகாரமாக அங்காரக வழிபாடும் சர்ப்ப சாந்தியும் முறைப்படி செய்தால் சந்தோஷம் அதிகரிக்கும்.

(தொடரும்)

## சந்தோஷங்களை சந்திக்கும் நேரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாளித்துவ உலகில் வல்லரசு யார்?

ஒரு சமூகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அதன் வெளிப்படையான விதிகளை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது. அவற்றை எப்படிப் பிரயோகிப்பது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, எப்போது பயன்படுத்துவது, எப்போது மீறுவது, வழங்கப்படும் வாய்ப்பை எப்போது நிராகரிப்பது, ஒன்றைச் செய்யப் பணிக்கப்படும்போது அதை நமது சொந்த விருப்பத்தின் பேரில் செய்வதாகக் காட்டிக் கொள்வது எப்போது என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். மறுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே வழங்கப்படும் வாய்ப்புகள் என்ற முரண்பாட்டை எடுத்துக்கொள்ளுங்கள்.

### பூடகமான விதிமுறைகள்

சோவியத் யுகத்துக்குப் பிறகு, யெல்ட்ஸினின் ஆட்சிக் காலம் என்பது ஒரு குழப்பமான காலகட்டம். சட்ட விதிமுறைகளெல்லாம் அப்போது வெளிப்படையாக அறியப்பட்டாலும், பெரும்பாலானவை சோவியத் ஒன்றியத்தின்போது இருந்த விதிமுறைகள்தான்; எழுதப்படாத, பூடகமான அந்த விதிமுறைகள், அதாவது, ஒட்டுமொத்த சமூகக் கட்டுமானத்தையும் அதற்கு முன்பு தாங்கிப் பிடித்திருந்த அந்த விதிமுறைகள் சிதைந்து போயின. சோவியத் காலகட்டத்தில் உங்களுக்கு மருத்துவமனையில் நல்ல சிகிச்சை, புதுவீடு வாங்குதல் போன்று எதாவது ஒரு காரியம் ஆக வேண்டுமென்றால், அதற்கான பூடகமான விதிமுறைகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

யாரைப் போய்ப் பார்ப்பது அல்லது யாருக்கு இலஞ்சம் கொடுப்பது, உங்களால் செய்ய முடிவது, முடியாதது எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கும். சோவியத் ரஷ்யா சிதைவுற்ற பிறகு, சாதாரண மக்கள் அன்றாட வாழ்வில் எதிர்கொண்ட அவஸ்தைகளில் ஒன்று எதுவென்றால், எழுதப்படாத அந்த விதிமுறைகள் மேலும் தெளிவற்றுப் போனதுதான். மக்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

வெளிப்படையான சட்டதிட்டங்களை எப்படி விளங்கிக் கொள்வதென்றும், எதை விடுப்பதென்றும், இலஞ்சம் எங்கே செல்லுபடியாகும் என்றும் மக்களுக்குத் தெரியவில்லை. விளாடிமிர் புடின் அரசின் கீழ் சமூகம் ஸ்திரமாகியிருப்பதன் காரணம், எழுதப்படாத இந்தச் சட்டதிட்டங்களுக்கு அவரது நிர்வாகம் வெளிப்படைத்தன்மையை நிறுவியிருப்பதே.

### கருத்தளவில் வல்லரசு

சர்வதேச அரசியலில் நாம் இன்னும் அந்த நிலையை எட்டிவிடவில்லை. 1990 களில் மேற்குலகின் வல்லரசுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவை ஒரு சுமுக்கமான ஒப்பந்தம் கட்டுப்படுத்தி வந்தது. மேற்கு நாடுகள் ரஷ்யாவை அது வல்லரசாக நடந்துகொள்ளாத பட்சத்தில் அதை வல்லரசாகக் கருதின.

மறுக்கப்பட வேண்டுமென்றே வழங்கப்பட்ட வாய்ப்பை ஒருவர் ஏற்றுக் கொண்டால் எப்படியிருக்கும்? ரஷ்யா வல்லரசாக நடந்து கொள்ள ஆரம்பித்தால்? இதுபோன்ற நிலை உண்மையில் ஒரு பேரழிவே; சமூகங்களுக்கு இடையிலான ஒட்டுமொத்த உறவுகளுக்கும் அச்சுறுத்தல் என்றே கருத வேண்டும். அதாவது, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஜார்ஜியாவில் நடந்ததுபோல். கருத்தளவில் மட்டுமே வல்லரசாக தான் இருப்பது குறித்து அயர்ச்சியுற்று, ரஷ்யா வல்லரசாக உண்மையில் நடந்துகொள்ளவே ஆரம்பித்தது அப்போது.

### முதலாளித்துவத்தின் வடிவங்கள்

இந்த நிலைக்குக் காரணம் என்ன? அமெரிக்க நூற்றாண்டு முடிபுக்கு வந்துவிட்டது. உலகளாவிய முதலாளித்துவத்தின் பல்வேறு மையங்கள் உருவாகிக் கொண்டிருக்கும் யுகத்தில் நாம் நுழைந்திருக்கிறோம். அமெரிக்கா, ஐரோப்பா, சீனா, ஒருவேளை லத்தீன் அமெரிக்காவிலும் கூட, முதலாளித்துவ முறைகள் தங்களுக்கே உரித்தான வடிவங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்கா என்றால், நவதாராளமய முதலாளித்துவம், ஐரோப்பா என்றால் மக்கள் நல அரசின் எச்சம், சீனா என்றால் சர்வாதிகார முதலாளித்துவம், லத்தீன் அமெரிக்காவில் வெகுஜன முதலாளித்துவம். தன்னை உலகின் தனிக்காட்டு அதிகார ராஜாவாக- அதாவது, சர்வதேச பொலிஸ்காரர்போல- நிறுவிக்கொள்வதற்கு அமெரிக்கா செய்த முயற்சிகள் தோல்வியுற்றன. எனவே, இப்போது பிராந்திய அளவிலான இந்த அதிகார மையங்கள், அவற்றின் முரண்படும் நலன்கள் சார்ந்து, தங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய, சட்டதிட்டங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அவை இருக்கின்றன.

### சிறு நாடுகள், பலிகடாக்கள்

நமது காலம்தான் மிக மிக ஆபத்தானதாக இருக்கக் கூடிய காலகட்டம் என்பதற்குக் காரணம் இதுதான். பார்ப்பதற்கு அப்படித் தெரியவில்லை என்றாலும், அதுதான் உண்மை. பனிப்போரின் போது சர்வதேசப் போக்கின் விதிமுறைகள் தெளிவாக இருந்தன. பரஸ்பரம் உறுதியாக ஏற்படக்கூடிய அழிவுகள். இந்த அழிவுகள் ஏற்படுவதற்கு வல்லரசுகளின் பைத்தியக்காரத்தனம்தான் உத்தரவாதம்.

ஆஃப்கானிஸ்தானை ஊடுருவியதன் மூலம் எழுதப்படாத இந்தச் சட்டதிட்டங்களை சோவியத் ஒன்றியம் மீறியதற்கு அது கொடுத்த விலை அதிகம். ஆஃப்கானிஸ்தான் போர்தான் ரஷ்ய அழிவின் ஆரம்பம். இப்போது பழைய மற்றும் புதிய வல்லரசுகள் பரஸ்பரம் பரீட்சித்துக் கொண்டிருக்கின்றன. அவரவர் உருவாக்கிக் கொண்ட சர்வதேச விதிமுறைகளைப் பிறர்மீது திணிக்கப் பார்க்கின்றன. தங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு அந்த விதிமுறைகளைப் பரிசோதித்துப் பார்க்கின்றன. அந்தப் பிரதிநிதிகள் வேறு யாருமல்ல, சிறு நாடுகள்தான்.

கருதுகோள்களை அறிவியல் ரீதியில் பரிசோதனை செய்யும் முறையை கார்ல் பாப்பர் என்ற அறிவியல் தத்துவவாதி ஒரு தடவை இப்படிப் புகழ்ந்தார்: இந்த வழிமுறையின் மூலம் நமக்குப் பதிலாக நமது கருதுகோள்களை நாம் சாகவிடுகிறோம். இன்றைய பரிசோதனை முறையில் பெரிய நாடுகளுக்கு பதிலாக சிறிய நாடுகள் அடிபடுகின்றன, சேதத்துக்குள்ளாகின்றன-முதலில் ஜார்ஜியா, தற்போது உக்ரைன். அதிகாரபூர்வ வாதவிவாதங்களெல்லாம் மனித உரிமைகள் விடுதலைகள் என்ற வகையில் மிகவும் தார்மீக தொனியில் இருந்தாலும் ஆட்டத்தின் தன்மை மிகவும் தெளிவு.

உக்ரைனில் நடக்கும் நிகழ்வுகள் ஜார்ஜியாவில் நடந்த பிரச்சினை போலவே தோன்றுகின்றன. அதன் இரண்டாம் பாகம்தான் இது. அதாவது கட்டுத் திட்டங்களுக்கு அடங்காததும் பல்வேறு மையங்களைக் கொண்டதுமான உலகின் அதிகாரத்துக்கான புவியரசியல் போராட்டத்தின் அடுத்த கட்டம் இது.

### உலகக் குடிமைத்துவம்

பழைய மற்றும் புதிய வல்லரசுகளுக்குப் பாடம் கற்பிக்கச் சரியான தருணம் இது. ஆனால் இதை யார் செய்வார்கள்? உலகளாவிய ஓர் அமைப்புதான் இதைச் செய்ய முடியும். கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன்பே, சர்வதேச சமூகத்தின் எழுச்சியில் வேர்கொண்ட ஒரு சர்வதேச சட்ட அமைப்பின் அவசியத்தைத் தத்துவவாதி இம்மானுவேல் கான்ட் கனவு கண்டார்.

நீடித்த சமாதானத்துக்கான தனது செயற்திட்டத்தைப் பற்றி அவர் எழுதுகிறார். உலகின் ஒரு மூலையில் உரிமைகள் மீறப்பட்டால், அது உலகெங்கும் உணரப்படும் நிலைக்கு மக்கள் சமூகம் முன்னேறியிருக்கிறது. அதனால் உலகக் குடிமைத்துவத்துக்கான பொதுச்சட்டம் என்னும் சிந்தனை ஒன்றும் ஆடம்பரமானதோ மிகைப்படுத்தப்பட்டதோ அல்ல.

சர்வதேச முதலாளித்துவப் பொருளாதாரத்தோடு இயைந்து செல்லும் சர்வதேச அரசியல் அமைப்பை உருவாக்குவது என்னும் சாத்தியமின்மையை நோக்கி இது நம்மை இட்டுச் செல்கிறது.

நடைமுறைச் சிக்கலுக்காக மட்டுமல்லாமல், அமைப்பு ரீதியிலான காரணங்களுக்காக இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்ளலாம். உலகளாவிய ஜனநாயகத்துக்கோ பிரதிநிதித்துவ உலக அரசாங்கத்துக்கோ சாத்தியம் இல்லாமல் போனால் என்னவாகும்? உலக அளவில் தேர்தல்கள் நடத்தி, அதன்மூலம் ஏற்படுத்தப்படும் சர்வதேச சுதந்திர ஜனநாயக அமைப்பாக உலக சந்தைப் பொருளாதாரத்தை நேரடியாக ஏற்படுத்தும் சாத்தியம் இல்லாமல் போனால் என்னவாகும்?



தற்காலத்தில் நமது உலகமயமாதல் யுகத்தில், நாம் இந்தப் பிரச்சினைக்கு விலை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அரசியலில், தொன்மையான பற்றுக்களெல்லாம், குறிப்பாக வலுவான இன, மத, கலாசார அடையாளங்களெல்லாம் வஞ்சத்தோடு திரும்பி வந்திருக்கின்றன. திறந்த சந்தைப் பொருளாதாரமும் சமூக வெளியில் உருவாகிக்கொண்டிருக்கும் பிளவுகளும் கைகோர்த்துச் செல்லும் நிலை என்ற நெருக்கடியைக் கொண்டுதான் நமது இன்றைய தலைவிதி வரையறுக்கப்பட்டிருக்கிறது. பெர்லின் சுவர் வீழ்த்தப்பட்டதற்குப் பிறகும், உலகமயமான சந்தையின் வரவுக்குப் பிறகும் எங்கும் புதுப் புதுச் சுவர்கள் தோன்ற ஆரம்பித்து வெவ்வேறு இன மக்களையும் அவர்கள் கலாசாரங்களையும் பிரித்துவிட்டிருக்கின்றன. ஒருவேளை இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில்தான் ஒட்டுமொத்த மனித இனத்தின் எதிர்காலமும் அடங்கியிருக்கக் கூடும். -தி இந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களாக இருப்பினும் யுத்த வெற்றியை கொண்டாட வேண்டும்

## இப்படிக் கூறுகிறார் உதய கம்மன்பில

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை நினைவுகூரும் வகையில் நிகழ்வுகளை வலியுறுத்தும் கூட்டமைப்பின் கோரிக்கை நியாயமற்றது. தமிழர்களாக இருப்பினும் யுத்த வெற்றியை கொண்டாட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளரும் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலியினை செலுத்துவது விடுதலைப் புலிகளை ஆதரிப்பதற்கு ஒப்பானதெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மே 18 ஆம் திகதியினை முள்ளிவாய்க்கால் நினைவு தினமாக அனுஷ்டிப்பதாக தமிழ் கட்சிகள் வலியுறுத்திவரும் நிலைமையில் இது தொடர்பில் கருத்து கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தமொன்று இடம்பெற்றதென்றால் அது தீவிரவாதிகளுக்கும் நாட்டிற்கும் எதிராகவே தவிர தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலில்லை. இதனை அனைத்து தரப்பினரும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். இறுதி யுத்தத்தில் இழப்புக்கள் ஏற்பட்டது உண்மையே.

ஆயினும் அவை தவிர்க்க முடியாததே. வடக்கில் தமிழ் மக்களை முப்பது வருடகாலமாக சிறை வைத்து சொத்துக்களை சூறையாடிய விடுதலைப் புலிகளை அழித்து அதன் வெற்றியினை நாட்டினையும் வடக்கு மக்களையும் பாதுகாத்த மகிழ்ச்சியினை அனைத்து இன மக்களும் கொண்டாட வேண்டும். இதில் எவ்வித பாகுபாடுமில்லை.

அதேபோல் வடக்கில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர எவருக்கும் தடையில்லை. ஒவ்வொரு குடும்பத்தினரும் அவரவர்களின் உறவினர்களை நினைவு கூறி அமைதியாக செயற்படலாமென அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆயினும் கொல்லப்பட்ட விடுதலைப்புலி தீவிரவாதிகளை நினைவு கூறி துக்கதினம் அனுஷ்டிப்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு மக்களை தூண்டிவிட்டு காரியத்தை சாதிக்க நினைக்கினறனர். முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை அனுஷ்டிக்கக் கோரி இரு பிரிவினரிடையேயும் பிரச்சினைகளை தோற்றுவிக்க நினைக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நியாயமற்றவையே.

புலம்பெயர் தீவிரவாத அமைப்புகளும் மேற்கத்தேய நாடுகளும் தமிழ் அரசியல் கட்சிகளை தூண்டுகின்றன.

இலங்கையில் குழப்ப ங்களை ஏற்படுத்தி மக்களிடையே தொடர்ச்சியான முரண்பாடுகளை ஏற்படுத்தவே எத்தனிக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கையில் இல்லாவிடினும் சர்வதேச அளவில் செயற்படுகின்றன. அவர்களுக்கு துணை போகும் வகையில் தமிழர்கள் செயற்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (2)

# பாகிஸ்தானிலிருந்து வரும் பொதிகள் சோதிக்கப்படும்

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து அனுப்பி வைக்கப்படும் பொருட்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானிலிருந்து தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் பொதிகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக சுங்கப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அண்மையில் பல்மருத்துவ சிகிச்சைக்கான உபகரணங்களுக்குள் ஏழு இலட்ச ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

தபால் பொதியூடாக இந்தப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

எனவே, எதிர்வரும் காலங்களில் பாகிஸ்தானிலிருந்து அனுப்பி வைக்கப்படும் சகல பொதிகளையும் கடுமையாக சோதனையிட சுங்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். (2)

# ஆயுதக் குழுக்களை கைது செய்ய பொலிஸ் நடவடிக்கை ஆரம்பம்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

நாட்டில் இயங்கி வரும் பல்வேறு ஆயுதக் குழுக்களை கைது செய்ய பொலிஸார் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கொலைகள், கொள்ளைகள், கடத்தல்கள், கப்பம் கோரல்கள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டு வரும் ஆயுதம் தாங்கிய நபர்களை கைது செய்ய விசேட தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். அண்மைய நாட்களில் இடம்பெற்ற கொள்ளைகள் கொலைச் சம்பவங்களின் போது குற்றவாளிகளிடம் சட்டவிரோத ஆயுதங்கள் காணப்பட்டன.

எனவே இது குறித்து விசாரணை நடத்தி குற்றவாளிகளை தண்டிக்க, விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆயுததாரிகள் குறித்து பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்படும்.

புலனாய்வுப் பிரிவினர், விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சட்டவிரோதமாக ஆயுதங்களை பயன்படுத்துவோரை கண்டுபிடித்து கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மையில் பேலியகொட பிரதேசத்தில் நகரசபை உறுப்பினர் கொலை மற்றும் குருணாகல் பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் கொலை போன்ற சம்பவங்கள் தொடர்பில் விரைவில் தகவல்களை வெளியிட முடியும் என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்களை வழங்க மக்கள் [illegible] நாக்கு தெரிவித்துள்ளார். (2)

# மருந்துப் பொருள் வர்த்தகம் குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்

(கொழும்பு)

இலங்கைக்கும் பங்களாதேசுக்கும் இடையிலான மருந்துப் பொருள் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கை ஒன்று அடுத்த மாதம் கைச்சாத்திடப்படவுள்ளது.

பங்களாதேசின் வெளிவிவகார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பங்களாதேஷ் செல்லவுள்ள நிலையில், இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையின் கீழ், பங்களாதேஷில் உற்பத்தி செய்யப்படுகின்ற மருந்துப் பொருட்கள் நேரடியாக இலங்கை அரசாங்கத்துக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதில் இடைத் தரகர்கள் செயற்பட முடியாது. முன்னதாக சுகாதார அமைச்சின் கீழ் செயற்பட்ட இடைத்தரர்கள் மருந்துப் பொருள் வர்த்தகத்தில் பாரிய மோசடிகளை மேற்கொண்டதன் காரணமாகவே இந்த நேரடி வர்த்தகத்துக்கான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்படவுள்ளது. (2)

# இன்று ஒரு தகவல்

## விதியின் பயன்

நாம் "ஒரு செயல் நடக்க வேண்டும்" என்று ஆசைப்படுகிறோம்- ஆனால், அது நடைபெறுவதில்லை.

நாம் "எது நடக்கக்கூடாது" என்று ஆசைப்படுகிறோமோ - அது நடந்து விடும்.

இதற்கு எதைக் காரணமாகச் சொல்வது?

இதற்குத் தான் சில பேர் "விதி" என்று பேர் வைத்துள்ளார்கள். எமது விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடந்து விட்டால் அது "விதி" என்ற பெயரில் சுலபமாக சொல்லப்படுகிறது.

ஒரு சமயம் தேவலோகத்திலே நாராயணனும் லட்சுமி தேவியும் மிகவும் உல்லாசமாக அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

பூலோகத்திலே நடப்பவை அனைத்தும் அவர்களுக்குத் தெரியும். அந்தச் சமயம் பார்த்து இங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். உணவு கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு ஒரு தனி இடத்திற்குப் போனான். அங்கே அமர்ந்திருந்து உண்பதற்கு முன்னர், கடவுளை நினைத்தான். "நாராயணா... நாராயணா" என்று நிவேதனம் செய்து விட்டு உணவை உண்ண ஆரம்பித்தான்.

தேவலோகத்திலே இருந்த லட்சுமி தேவி இதைப் பார்த்து விட்டு நாராயணனிடம்... சொன்னாள்...

"அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன் அவன் தினமும் பிச்சையெடுத்து உணவு உண்பதற்கு முன்னர் முதலிலே உங்களுக்கு அர்ப்பணித்து விட்டுத்தான் சாப்பிடுகிறான். அப்படியான உங்கள் பக்தனை பிச்சையெடுக்க விட்டுள்ளீர்கள். இது நியாயமா? அவனுக்கு சற்று செல்வத்தை வழங்கி வசதியாக வாழ வைக்கக் கூடாதா?" என்று கேட்டார். இதைக் கேட்ட நாராயணன் சிரித்தார்.

அதன்பின் கூறினார்... இவன் முற்பிறவியிலே செல்வந்தனாகத்தான் இருந்தான். அப்போது யாருக்குமே இட்டு ஈயவில்லை. அதனால்தான் இப்பிறவியிலே கஷ்டத்தை அனுபவிக்கிறான். அது அவனுடைய விதியின் பயன்" என்றார் கடவுள்.

"என்ன கூறுகிறீர்கள்? விதியா... நாம் நினைத்தால் எது முடியாது? இப்போது நான் அவனுக்கு உதவி செய்யப் போகிறேன்" என்றார்.

"என்ன உதவி?" என்று கேட்டார்.

"அவனுக்கு சிறிது செல்வம் கொடுத்து கஷ்டத்திலேயிருந்து காப்பாற்ற போகிறேன்" என்றார்.

"சரி செய்து பார்" என்று கடவுள் கூறினார்.

உடனே லட்சுமி தேவி... ஒரு பண முடிச்சை பூலோகத்திலே அந்தப் பிச்சைக்காரன் தினமும் நடந்து வரும் பாதை வழியே போட்டார்.

ஆனால், அந்தப் பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? அன்றைய தினம் பார்வையில்லாதவர்கள் எப்படி தெருவில் நடப்பார்கள் என்று தெரிந்து கொள்வதற்காக தனது இருகண்களையும் இறுக மூடியவாறு தட்டுத்தடுமாறி நடந்தான். இதிலே வழியிலே கிடந்த பண முடிச்சு அவனுக்குத் தெரியவில்லை. பண முடிச்சையும் தாண்டிப் போய்விட்டான்.

சற்று நேரம் கடந்த நிலையில் கண்களைத் திறந்தான். "ஆஹா! கண்ணில்லாதவன் மாதிரியே நடந்து விட்டோமே என்ற பெருமையில் அவன் அப்படியே சென்று விட்டான்.

இவன்போன பாதையால் ஒருவன் சாதாரணமாக நடந்து வந்து கொண்டிருந்தான். அவ்வேளையில் அவனுக்கு கண்ணிலே அந்தப் பண முடிச்சு தென்பட்டது. அதை எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடக்க ஆரம்பித்தான். தேவலோகத்தில் இருந்து நாராயணனும் லட்சுமிதேவியும் இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

"இப்போது என்ன நடந்ததென்று பார்த்தாயா... அந்த பக்தனை பணக்காரனாக மாற்ற வேண்டுமென்று துடி துடித்தாயே... முடிந்ததா உன்னாலே?" என்று கேட்டார்.

லட்சுமிதேவி அதன்பின்னர் தான் ஒத்துக் கொண்டார். உண்மைதான் பிரபு; விதிப்படிதான் எதுவுமே நடக்கிறது என்பதை இப்போது நான் ஒத்துக் கொள்கிறேன்" என்றாள்.

இந்தக் கதையை அறிவு பூர்வமாக சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

"ஒரு பக்தனை பணக்காரனாக மாற்ற வேண்டுமென கடவுள் நினைத்தால்கூட அது முடியாது என்ற ஒரு உண்மை இக்கதையினுள் இருக்கிறது. அந்த விதி யார் கையிலே இருக்கிறது... மனிதன் கையிலேதான்.

மனிதன் சிறந்த விதமாக நடந்து கொண்டால், விதியும் அவனுக்கு சாதகமாக அமையும்.

விழித்துக் கொண்டிருக்க வேண்டிய நேரத்திலே கண் மூடியிருக்கிறது போல ஆகிவிடும். இந்தப் பிச்சைக்காரனுக்கு நடந்த மாதிரி...

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலம்புரி செய்தியையடுத்து

# கிளி. பொதுச்சந்தை கீரை வியாபாரிகளுக்கு கடைத்தொகுதிகள் அமைக்கப்படுகின்றன



வியாபாரத்தில் ஈடுபடும் கீரை வியாபாரிகள்



அமைக்கப்பட்டு வரும் கீரைக்கடைகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தையில் கீரை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வியாபாரிகளுக்கான கடைத் தொகுதிகள் வலம்புரிச் செய்தியை அடுத்து அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பொதுச்சந்தையில் கீரை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற 5 வியாபாரிகளுக்கு தற்காலிக கடைகள் இல்லாத நிலையில் வியாபாரத்தை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் அவர்கள் மழையிலும் வெயிலிலும் பாதிக்கப்பட்டு வியாபாரத்தை முன்னெடுத்து வருவதையிட்டு கடந்த மார்ச் மாதமளவில் வலம்புரி பத்திரிகை செய்தியை வெளியிட்டிருந்தது.

இதன்பிரகாரம் கரைச்சிப் பிரதேச சபைகளின் ஏற்பாட்டில் கடைகள் அமைத்துக் கொடுப்பதற்கான வேலைகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது கடைகளுக்கான நிலம் சீமெந்தினால் போடப்பட்டு சுவர்கள் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் இடம்பெற்று வருகின்றன.

ஒரு வருடமாக பல்வேறு அசௌகரியங்களின் மத்தியில் கீரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் நன்மையடையவுள்ளனர். (9-271)

# வவுனியா ஸ்கந்தபுரம் வீதி மக்களால் புனரமைப்பு



(குருமன்காடு)

வவுனியா, ஸ்கந்தபுரம் பிரதான வீதி சிவில் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் அப்பகுதி மக்களால் நேற்று முன்தினம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியை நாகர் இலுப்பைக்குளம், இராசேந்திரகுளம், தவசியாகுளம் உள்ளிட்ட பல பகுதிகளைச் சேர்ந்தோர் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் மழை காலங்களில் பேருந்து சேவை மிகக் குறைவாகவே இடம்பெற்று வந்தது. இதனால் வைத்தியசாலை செல்வோர், சந்தைகளுக்கு மரக்கறி கொண்டு செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பலரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வந்தனர்.

சுமார் 5 கிலோ மீற்றர் நீளமான இவ் வீதியை புனரமைத்துத் தருமாறு பிரதேசசபை, பிரதேச செயலகம், கிராம அபிவிருத்திச் சங்கம், அரசியல்வாதிகள் எனப் பலரிடமும் முறையிட்டு எந்தப் பயனும கிடைக்கவில்லை.

இதனையடுத்து சிவில் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில் வறுமைப்பட்ட மக்களிடம் சிறுக சேர்த்த பணத்தின் மூலம் மண் போட்டு வதிகளை திருத்துவதாக அப்பகுதி மக்கள மேலும் தெரிவித்தனர். (9-250)

# சமிக்ஞையை அலட்சியம் செய்த இருவர் பொலிஸாரிடம் மாட்டினர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கனகபுரம் வீதியிலுள்ள புகையிரத கடவையின் சமிக்ஞையினை அலட்சியம் செய்து வந்தவர்களில் இருவர் நேற்றையதினம் கிளிநொச்சி பொலிஸாரிடம் வசமாக மாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த புகையிரதக் கடவையினால் நேற்றுக்காலை 6.30 மணியளவில் புகையிரதம் கடக்க முற்பட்டது. இந்நிலையில், வீதியினால் பயணிப்போரின் பாதுகாப்பிற்காக சமிக்ஞை போடப்பட்டது.

எனினும் அதனை அலட்சியம் செய்தவாறு இருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். இதனை அவதானித்த வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் இருவரையும் தடுத்த போது, அவர்கள் கிளிநொச்சி பொதுச் சந்தையினுள் சென்று தலைமறைவாக எத்தனித்த வேளை பொலிஸாரிடம் வசமாக மாட்டியுள்ளனர்.

இவர்கள் இருவரையும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸார் பணித்துள்ளனர்.

இப் புகையிரத கடவையினால் பயணிக்கின்ற பலர் சமிக்ஞைகளை அலட்சியம் செய்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (9-271)




## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

சிவநகர் முதியோர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் நடைபெறவுள்ளது.

முதியோர்களுக்கான சிறு கைத்தொழில் முயற்சி, வருமான வசதிகளை ஏற்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளதனால் சங்கத்திற்குட்பட்ட அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு தலைவர் அறிவித்துள்ளார். (9-254)

# புதையல் தோண்டிய பதினொரு பேர் கைது

(குருமன்காடு)

கனகராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகதம்பிரான் ஆலயத்திற்கு அருகில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த 11 பேரை மாங்குளம் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த படையினர் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதாகிய சந்தேகநபர்கள், குளியாப்பிட்டிய, கொச்சிக்கடை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மாங்குளம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும அவரிகளிடமிருந்து கெப் ரக வாகனம், மண்வெட்டி, பிக்கான்-2, அலவாங்கு, பித்தளை வலை மற்றும் பூஜைக்கான உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (9-250)

# சிறுபோகத்திற்கு சிபாரிசு செய்க

(பூநகரி)

பூநகரி குடம் உறுட்டி குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கையை மேற்கொள்ள சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக் குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கையை மேற்கொள்வதற்கான திட்டம் மழையின்மையால் ஏற்பட்ட வரட்சி காரணமாக கைவிடப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசனால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தற்போது பெய்த மழையினால் குளத்தின் நீர் மட்டம் அதிகரித்து பயிர்ச் செய்கையை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ள போதிலும் செய்கைமேற்கொள்வதற்கான அனுமதி விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை.

வன்னிப் பகுதிகளில் பெரும்பாலான குளங்களின் கீழ் சிறு போகச் செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் குறித்த குளத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்டளவிலாவது சிறுபோகத்தை மேற்கொள்ள பூநகரி கமநல சேவை அதிகாரிகள் சிபாரிசு செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரியுள்ளனர்.

கடந்த வருடம் இக்குளத்தின் கீழ் 400 ஏக்கருக்கு மேல் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-84)



உருத்திரபுரம் பிரதான வாய்க்கால் சிரமதானம் செய்யப்பட்ட போது... (படம்:-சிவநகர் செய்தியாளர்)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் திட்டமிட்டபடி அனுஷ்டிக்கப்படும்

## சிவசக்தி ஆனந்தன் உறுதி

(வவுனியா)

வவுனியாவில் முள்ளிவாய்க்கால நினைவேந்தலை அனுஸ்டிக்க முன்பதிவு செய்யப்பட்ட மண்டபம், இராணுவ புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் காரணமாக வழங்க அனுமதி மறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னி மண் மீதான இலங்கை அரச படைகளின் தாக்குதல்களின் போதும், இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்காலிலும் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின தலைமையில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுக்களினதும், வவுனியா மாவட்ட சிவில் சமூக அமைப்புகளினதும் பங்களிப்புடன் வவுனியா வைரவ புளியங்குளம் முத்தையா கூட்டுறவு கலாசார மண்டபத்தில் (முத்தையா மண்டபம்) மே மாதம் 18ஆம் திகதி யன்று பி.ப 2.30 மணிக்கு ஆத்ம சாந்தி பிரார்த்தனை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆத்மசாந்தி பிரார்த்தனைக்காக முன்கூட்டியே, கடந்த திங்கட்கிழமையன்று கடிதம் மூலம் மண்டப பாவனைக்கான அனுமதி நாடாளுமன்ற உறுப்பினரால் கோரப்பட்டு மண்டபம் முற்பதிவும் செய்யப்பட்டிருந்ததாக தெரிய வருகின்றது.

இந்நிலையில் இராணுவ புலனாய்வாளர்கள் முள்ளிவாய்க்கால் நினைவை அனுஷடிக்க முத்தையா மண்டபத்தை வழங்க வேண்டாம் என்று எச்சரித்துள்ளதோடு மீறி வழங்கினால் கைது செய்யப்படுவீர்கள் என்றும் அச்சுறுத்தியுள்ளதையடுத்து மண்டபத்துக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கருத்து வெளியிடுகையில்,

எமது தேசத்தின் வரலாற்றில் கறை படிந்த மறக்க முடியாத துயர நிகழ்வை தமிழினத்தின் தேசிய துக்க நிகழ்வாக பிரகடனப்படுத்த வேண்டியது ஈழத்தமிழர் நலனில் கரிசனை கொண்டுள்ள, ஈழத் தமிழர்களின் பாதுகாப்பில் அக் கறை [illegible] வரலாற்று கடமையாகும்.

போரில் கொல்லப்பட்ட எமது உறவுகளின் நினைவுகளில் நினைந்துருகி கடந்த நான்கு வருடங்களாக கடுமையான அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், இடையூறுகளுக்கு மததியிலும் மே மாதம் 18ஆம் திகதி யன்று ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் உணர்வுபூர்வமாக ஈடுபட்டு வருகினறோம். இம்முறையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்காக எம்மால் முற்பதிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட மண்டபத்துக்கான அனுமதி மறுக்கப்படடுள்ளது.


வன்னி போரின் போது பாதிக்கப்பட்டவர்கள், உறவுகளை இழந்தவர்கள் என்று மட்டுமல்லாது, அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள், கட்சிகளின் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட அனைத்து அமைப்புக்களும் கலந்து கொண்டு உணர்வுபூர்வமாக போரில் கொல்லப்பட்ட எமது உறவுகளின் நினைவுகளில் கூட்டாக நினைந்துருகி ஆத்மசாந்தி பிரார்த்தனையில் ஈடுபடுவதற்கு அமைவாகவே குறித்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன,

எனினும், போரில் கொல்லப்பட்ட எமது உறவுகளுக்கு திட்டமிட்டபடி பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் மே மாதம்18 ஆம் திகதி யன்று ஆத்மசாந்தி பிரார்த்தனை இடம் பெறும் என்றார். (9-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தை கையிலெடுக்கும் குழுக்களை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும்

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு) நாட்டில் இன்று சட்டமும் ஒழுங்கும் விமர்சனங்களுக்குள்ளாகியுள்ளன. ஒரு குழுவினர் சட்டத்தைக் கையிலெடுத்து செயற்படுகின்றனர். இதனால் எதிர்காலத்தில் சர்வதேச ரீதியில் நாடு பாதிப்புகளை எதிர்நோக்க வேண்டியேற்படும் என்று அரசை எச்சரிக்க வேண்டியுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தம்புள்ளையில் நகர அபிவிருத்தி அதிகார சபையும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் மேற்கொள்ள வேண்டிய பணிகளை ஒரு பௌத்த குரு முன்னின்று மேற்கொண்டு வருகின்றார். ஏனைய பகுதிகளில் பொலிஸாரின் கடமைகளை வேறோர் குழு செய்ய எத்தனிக்கிறது. பல்லின மக்கள் வாழும் நாட்டில் இவ்வாறான மேலாதிக்கம் விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

இவ்வாறான நிலைமைகள் சர்வதேச ரீதியில் எமது சட்டங்கள் தொடர்பில் பல மோசமான கருத்துகள் உருவாகி விடும் என்பதை அரசு கவனத்திற் கொள்ள வேண்டும்.

தம்புள்ளையில் ஹைரிய்யா பள்ளிவாசல் 1960 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதாகும். இதை அப் பகுதியைச் சேர்ந்த ஒரு முக்கியமான அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் காணி அமைச்சரும் கூட என்றாலும் ஒரு விகாராதிபதி பள்ளிவாசலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

தம்புள்ளை நகரில் முஸ்லிம் கள் வாழக்கூடாது. தொழுகை நடத்தக் கூடாது என்பதே அவரது நோக்கமாகும். விகாராதிபதி காணி அமைச்சருடன் தனக்குள்ள தனிப்பட்ட விரோதம் காரணமாக இந்த விடயத்தில் உறுதியாக இருக்கிறார்.

அளுத்கமயில் முஸ்லிம் வர்த்தக நிலைய தீவைப்பு சம்பவத்துக்கு முன்பு அங்கு பௌத்த குருமாரே ஆர்ப்பாட்டமொன்றை முன்னின்று நடத்தியுள்ளார்கள். இலங்கை காட்டுதர்பார் நடத்தும் மதகுருமார்கள் இருக்கும் நாடு என்பது சர்வதேச ரீதியில் உறுதி செய்யப்பட்டுவிட்டால் எமது நாட்டின் அந்நிய செலவாணி வர்த்தக தொடர்புகள், வெளிநாட்டு முதலீடுகள், உல்லாசத்துறை அனைததிலும் பாதிப்புகள் ஏற்படும்.

சர்வதேச நெருக்கடிகளின்போது இலங்கைக்கு கைகொடுத்த அரபு நாடுகளின் ஆதரவுகூட இழக்கப்படும் நிலை ஏற்படும். எனவே, அரசுக்கு சமூகத்தின் உரிமைகளை தெளிவு படுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளதுடன் அரசை எச்சரிக்க வேண்டிய நிலையும் உருவாகியுள்ளது.

தான்தோன்றித்தனமாக சட்டத்தை கையிலெடுத்து செயற்படும் குழுக்களின் நடவடிக்கைகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படுவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் அரசு அவசரமாக மேற் கொள்ள வேண்டும் என்றார். (2)

## முதியோரில்லத்தில் மண்டப திறப்புவிழா

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்ல 7 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வைத்திய நிபுணர் அமரர் செல்வி யமுனா மார்கண்டு நினைவு மண்டபத்திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காரைநகர் மார்க்கண்டு சிவபாக்கியம் குடும்பத்தினரின் தலைமகள் அமரர் செல்வி டாக்டர் யமுனா மார்க்கண்டு நினைவாக புதிய விடுதிச் சாலையை நவீன வசதிகளுடன் அமைத்து வழங்கியுள்ளனர்.

திரு.திருமதி தி.மார்க்கண்டு சிவபாக்கியம் தம்பதியினர் மண்டபத்தை திறந்து வைப்பார்கள் என கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (2)

## மஹோற்சவம்

அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவ பெருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலயத்தில் விளையாட்டு மற்றும் கல்வித்துறையில் சிறந்து விளங்கும் ஐந்து மாணவர்களை தெரிவு செய்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் 2000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை கையளித்த போது... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

# மே 18 இனை உயிரிழந்தவர்களின் நினைவு தினமாக அனுஷ்டிக்க முடியாது

## மீறினால் கைதாவர்-பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் சக பயங்கரவாதிகளும் கொல்லப்பட்ட தினமே மே 18 ஆகும்.

அத் தினத்தை தமிழர்கள் நினைவு கூரவோ பொது நிகழ்வுகளை நடத்தவோ முடியாது என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் பல்கலை நிர்வாகம் இராணுவத்துடனான சந்திப்பின் போது மே 18 ஆம் திகதி பொது நிகழ்வுகளை நடத்த முடியாது என இராணுவம் அறிவித்திருந்தது.

இச் சந்திப்பில் இராணுவம் மற்றும் பொலிஸார் கலந்து கொண்டிருந்த போதிலும் இராணுவமே தனது நிலைப்பாட்டை அறிவித்திருந்தது.

மே 18 தொடர்பில் பொலிஸாரின் நிலைப்பாடு என்ன? என ஊடகவியலாளர்களினால் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவத்தின் நிலைப்பாடு வேறு எமது நிலைப்பாடு வேறு அல்ல இராணுவத்தின் முடிவே எமது முடிவாகும்.

இறுதிக்கட்ட போரின் போது பிரபாகரனும் சக போராளிகளும் அதிகளவாக கொல்லப்பட்டதோடு, பொது மக்கள் மிகக் குறைவாகவே கொல்லப்பட்டனர். ஆகையால் மே 18 இனை உயிரிழந்தவர்களின் நினைவு தினமாக அனுஷ்டிக்க முடியாது. வெள்ளமுள்ளிவாய்க்காலில் மட்டும் அல்ல கட்டுநாயக்காவிலும் கொழும்பிலும் அறந்தாவிலும் காத்தான் குடியிலும் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவ்வாறாயின் அவர்களுக்கும் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

தமிழர்களிற்கும் சேர்த்துதானே சிங்களவர்கள் வெற்றிவிழா கொண்டாடுகின்றனர். ஆகையால் தமிழர்கள் மட்டும் துக்க தினம் அனுஷ்டிக்கத் தேவையில்லை. பொலிஸார் இராணுவத்தினர் ஆகியோரின் உத்தரவுகளை மீறி மே 18 இல் அரசியல் கட்சிகள் உட்பட யாராவது பொது நிகழ்வுகளில் ஈடுபட்டால் அவர்கள் கைது செய்யப்படுவர். இது அரசின் உத்தரவு என விமல சேன மேலும் தெரிவித்தார்.(2-4)

# கரவெட்டி பிரதேச சபையில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் முள்ளி வாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான அப்பாவி தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் சபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் வெளிநடப்பு செய்துள்ளனர்.

இந் நிகழ்வு நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இருந்த போதிலும் ஏனைய சபை உறுப்பினர்கள் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் வெளிநடப்பு செய்தமைக்கு சபை உறுப்பினர்கள் மூவர் எதிர்ப்பு தெரிவித்து, அவர்களும் சபையை விட்டு வெளியேறினர்.

ஆனால் சிறிது நேரத்தின் பின்னர் இரு உறுப்பினர்கள் மீண்டும் சபைக்கு சமுகமளித்தனர்.

இதேவேளை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அஞ்சலி நிகழ்வை அறிந்த இராணுவ புலனாய்வு பிரிவினர் மற்றும் பயங்கரவாதத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் பிரதேச சபை முன்றலில் முற்றுகையிட்டனர் என் பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தவிசாளர் மற்றும் செயலாளரின் வெளிநடப்பிற்கு சபை உறுப்பினர்கள் பலரும் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். (2-60-24)

# இயல்,இசை, நாடகவிழாவின் ஐந்தாம் நாள் நிகழ்வுகள்

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல்,இசை, நாடக விழா இல 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமையுடன் நிறைவுபெறும்.

ஐந்தாம் நாள் நிகழ்வுகள் மங்கல வாத்தியங்கள் முழங்க ஆரம்பமாகும். இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வின் ஆசியுரையை நாவாந்துறை பங்குத்தந்தை வணபிதா பா.பி. இராசலிங்கம் ஆற்றுவார்.

அதனைத் தொடர்ந்து சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும் கூடி விளையாடு பாப்பா நாத சமர்ப்பணம் இடம்பெறும்.

அதன் பின்னர் கொக்குவில் கலாபவன மாணவர்கள் வழங்கும் நர்த்தன நிவேதனம் நிகழ்வு நடைபெறும்.

கலைஞர்கள் கௌரவிப்பு, திருமணக் கலாமன்றம் வழங்கும் குவேனி தென்மோடி நாட்டுக் கூத்து ஆகியன இடம் பெறும். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி பரராஜசேகரம் நாகராஜேஸ்வரி

மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜ சேகரம் நாகராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு Ogden Funeral Homes, 4164 Sheppard Avenue East, Scarborough, ON M1S 1T3, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவமோகன் நிர்மலாதேவி

யாழ்.கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரன்றோவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவமோகன் நிர்மலா தேவி கடந்த 12 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி அந்தோனிப்பிள்ளை அக்கினேசம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அக்கினேசம்மா நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனிதயாகப்பர் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி இராமலிங்கம் தங்கம்மா

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தங்கம்மா கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொழும்பு பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி குமாரதாசன் தர்ஷினி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் அவுஸ்ரேலியா Melbour ne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குமாரதாசன் தர்ஷினி (முன்னாள் ஆசிரியர்–சைவ மங்கையர் கல்லூரி கொழும்பு) கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு Boyds Chapel, Springvale Botanical Cemetery, 600 Princes Hwy, Springvale VIC 3171 என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச விசாரணை

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக சர்வதேச விசாரணையை கேட்டுப்பெற்றே தீருவோம் என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் தமிழர்களின் தாயகம் தமிழீழத்தாயகத்தை பிரகடனப்படுத்தியுமுள்ளார்.

அதேவேளை எதிர்வரும் காலங்களில் மே மாதம் முழுவதும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை அனுஷ்டிக்க தீர்மானித்துள்ளதாகவும், மாகாணசபையின் அமர்விலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் கைதடியிலுள்ள வடக்கு மாகாணசபையின் பேரவை செயலகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டதையடுத்து பேரவைச் செயலகத்தின் முன்பாக தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து நினைவுரையாற்றிய சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நினைவேந்தல் நிகழ்வில் தமிழரின் விடுதலைப்போராட்டத்தில் உயிரிழந்த வீர மறவர்களுக்காக இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

மே 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை முள்ளிவாய்க்காலில் மரணித்த செந்தமிழ் உறவுகளுக்காகவும், படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் மறைவுக்கு ஆழ்ந்த அஞ்சலிகளையும், வீரவணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுவோம்.

இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காக சர்வதேச விசாரணையை கேட்டுப்பெற்றே தீருவோம். சர்வதேச விசாரணைமூலம் இதனைநிலை நாட்டியே ஆகுவோம்.இதனைவிட நிரந்தரமான அரசியல் தீர்வைப்பெறவும் நாங்கள் உழைப்போம். எவ்வளவு அடக்கு முறைகளைப்பிரயோகித்து நீங்கள் என்னதான் தடுத்தாலும்.எங்களுடைய தரப்பிலேயுள்ள அத்தனை நினைவுச்சின்னங்களையும் நீங்கள் அழித்தாலும் நீங்கள் எழுப்பிய அத்தனை நினைவுச்சின்னங்களும், பாராளுமன்றத்திற்கு முன்பாகவுள்ள படைவீரர்களின் நினைவுச்சின்னங்களாகயிருக்கலாம், ஆனையிறவிலுள்ள நினைவுச்சின்னமாகயிருக்கலாம் முள்ளிவாய்க்காலிலுள்ள நினைவுச்சின்னமாகயிருக்கலாம் மற்றைய இடங்களிலும் உள்ள நினைவுச்சின்னங்களாகயிருக்கலாம். அவையனைத்தும் ஒரு போராட்டம் இங்கு நடந்ததை எடுத்துக் காட்டும்.

சிங்களச்சிறுவர் இதனையறிந்து கொள்வார்கள்.அவர்களின் சந்ததி சொல் லும் தமிழர்களின் வீரத்தை. ஆயுதப் போராட்டம் மௌனித்துவிட்டது என்று சொல்லப்படுகின்றது. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னரும் போராட்டம் நடைபெற்ற போதும் மக்கள் மீதான தாக்குதல்களையும் அடக்கு முறைகளையும் நாம் கண்டித்து வந்துள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வோம்.







தீபத்தை காலால் மிதிக்கும் பொலிஸார்

தென்னிலங்கையில் அரசாங்கமும், ஜே.வி.பியினரும் தங்களின் உறவினர்கள் அமைப்பினைச்சேர்ந்தவர் சேர்ந்த இறந்தவர்களை நினைவு கூர முடியும் என்றால் நாம் ஏன் நினைவுகூர முடியாது.

இறந்தவர்களுக்காக அஞ்சலி செலுத்தி அனுஷ்டிக்க ஜே.வி.பியினருக்கு அனுமதியுள்ளது என்றால் எமக்கேன் அனுமதி வழங்க மறுக்கின்றனர்.

தமிழர்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர் என்பதை இதன் மூலம் அறிந்துகொள்ளமுடிகின்றது. நவம்பர் 13 ஆம் திகதியை ஜே.வி.பியினர் அனுஷ்டிக்க முடியும் என்றால் ஈழத்தமிழர்கள் இறந்த உறவுகளை மே 18 இல் ஏன் அனுஷ்டிக்க முடியாது.

இரண்டாம் தரப்பிரஜைகளாக தமிழர்கள் பார்க்கப்படுவதே இந்த அடக்கு முறைகளுக்கு காரணம். எனவே தமிழ் மக்கள் எழுச்சியாக மே 18 ஆம் திகதிவரையும் ஏன் அந்த திகதியைக்கடந்தும் இந்த மாதம் முழுதும் ஏன் மாகாணசபை அமர்வின் போதும், மாகாணசபையை ஒத்திவைத்தும் அஞ்சலி செலுத்தவேண்டும் இதனையாராலும் தடுக்க முடியாது என்றும் சவால் விடுகின்றேன் என்றார்.

இதேவேளை இறுதிப்போரில் உயிரிழந்த உறவுகளை நாம் நினைவு கூருவதை யாரும் தடுக்க முடியாது என்றும் தமிழர்களின் தாகம் தமிழீழ தாயகம் என்று பிரகடனப்படுத்தி தனது பேச்சை நிறுத்திக் கொண்டார்.

இதேவேளை இந்த நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினரான திருமதி அனந்தி சசிதரன் தெரிவிக்கையில்.

வன்னிப்போரில் சிக்குண்டவர்களில் ஒருத்தி என்ற வகையிலும். வன்னிப்போரில் பாதிக்கப்பட்டவள் என்ற வகையிலும்.இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளேன்.

இறந்த உறவுகளுக்கு எங்களுடைய ஆத்மாத்தமான வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். போரிலே இறந்த, மரணித்த எங்களுடைய உறவுகளுக்கு அஞ்சலிகளை எந்நேரமும் எத்தனை தடைகள் விதித்தாலும் நான் மனிதாபிமான முறையில் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்துக்கொள்ளுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# சிறுமி மலாலா ஓவியம் 61 இலட்சத்துக்கு ஏலம்

(நியூயோர்க்)

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளால் சுடப்பட்டு, தற்போது பெண் கல்விக்காக போராடி வரும் சிறுமி மலாலாவின் ஓவியத்தை பிரிட்டிஷ் ஓவியர் வரைந்து நியூயோர்க்கில் ஏலம் விட்டார்.

வீட்டில் மலாலா படிப்பது போன்ற ஓவியம் ரூ.61 இலட்சத்துக்கு ஏலம் போனது. பாகிஸ்தானில் கடந்த 2012 ஆம் ஆண்டு பள்ளிக்கு சென்ற போது, 15 வயதான மலாலா யூசுப் சாயி, தலிபான் தீவிரவாதிகளால் சுடப்பட்டார். இதில் படுகாயம் அடைந்த மலாலா, லண்டன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தாள்.

அதன்பின், சிறுமிகளின் கல்விக்காக அறக்கட்டளை அமைத்து, பெண் கல்விக்காக பிரசாரம் செய்து வருகிறாள். உலகிலேயே மிக சிறந்த வீர பெண் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பாராட்டியுள்ளார்.

இந்நிலையில் கடந்த வாரம் பிரிட்டிஷ் ஓவியர் ஜோனாத்தன் இயோ, மலாலாவை சந்தித்து ஓவியமாக வரைய வேண்டுகோள் விடுத்தார். அதன்படி, மலாலா கதிரையில் அமர்ந்து வீட்டு பாடங்களை படிப்பது போல தத்ரூபமாக வரைந்தார்.

ஏற்கனவே, சியன்னா மில்லா, கெவின் ஸ்பேஸ்சி போன்ற பிரபலங்களை வரைந்த பிரிட்டிஷ் ஓவியர் ஜோனாத்தன். இந்நிலையில் மலாலா ஓவியத்தை நேற்று முன்தினம் நியூயோர்க்கில் உள்ள கிறிஸ்டி ஏல மையத்தில் ஏலம் விட்டார். இந்த ஓவியத்தை ஒருவர் ரூபா 61 இலட்சத்துக்கு ஏலம் எடுத்தார். மலாலாவின் ஓவியம் ரூபா 35 இலட்சத்தில் இருந்து ரூபா 47 இலட்சத்துக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ரூபா 61 இலட்சத்துக்கு ஏலம் போனது. அதை வாங்கியவரின் பெயர் விபரம் வெளியிடப்படவில்லை.

# அமெரிக்க சட்டக் கல்லூரி டீனாக இந்தியர் நியமனம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் இயங்கும் பெர்க்லே சட்ட கல்லூரி உலகிலேயே மிகச்சிறந்த கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு தான் அமெரிக்காவில் இயற்றப்படும் பல்வேறு அரசியலமைப்பு சட்டங்கள் ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்கப் படுகின்றன.

புகழ்பெற்ற இந்த பெர்க்லே சட்ட கல்லூரி டீனாக, அமெரிக்காவில் வசிக்கும் இந்திய வம்சாவளியை சேர்ந்த 44 வயதான சுஜித் சவுத்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஜூலை மாதம் முதலாம் திகதி டீனாக பொறுப்பேற்பார் என்றும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் இந்த பதவியில் இருப்பார் என்றும் கல்லூரி நிர்வாகத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது.

# பயங்கரவாத சதியை முறியடித்த மலேசிய பொலிஸ்

(கோலாலம்பூர்)

சென்னை மற்றும் பெங்களூரில் உள்ள, வெளிநாட்டு தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த சதியை, மலேசிய பொலிஸார் முறியடித்தனர்.

தெற்கு ஆசியாவைச் சேர்ந்த பயங்கரவாதி ஒருவர் கைது செய்யப்பட்டதன் மூலம், இந்த சதி முறியடிக்கப்பட்டது.

இது தொடர்பாக, கோலாலம்பூரில், மலேசிய பொலிஸ் உயர் அதிகாரி கூறியதாவது,

கோலாலம்பூரில் உள்ள கேபோங் பகுதியில் கடந்த புதன்கிழமை பகல் வேளையில் மலேசிய பயங்கரவாத தடுப்புப் படையினர் சோதனை நடத்தினர். அப்போது, தெற்கு ஆசிய பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதன் மூலம், சென்னை மற்றும் பெங்களூரில் உள்ள, வெளிநாட்டு தூதரகங்களில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த சதி முறியடிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர், குடியேற்றச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது, மேலும் சில நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

கைது செய்யப்பட்டவரை, கடந்த டிசெம்பர் முதல், பொலிசார் கண்காணித்து வந்தனர். அதன்மூலம் கிடைத்த தகவல்களை, ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இந்திய அரசு அதிகாரிகளுக்கு தெரிவித்தோம். அதை தீவிரமாக பரிசீலித்த இந்திய அதிகாரிகள், ஏப்ரல், 29 இல் மூன்று பயங்கரவாதிகளை கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவிலும், மற்ற உலக நாடுகளிலும், பயங்கரவாத தாக்குதல்கள் நடக்காமல் தடுக்க, அன்னிய பாதுகாப்பு நிறுவனங்களுடன் மலேசிய பொலிஸார் இணைந்து செயற்படுவர் என அந்த உயர் பொலிஸ் அதிகாரி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாததது என்று எதுவுமில்லை. - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நரேந்திர மோடியின் ஆட்சியில் ஈழத்தமிழர்களுக்கு விடிவு கிடைக்கட்டும்

இந்தியப் பொதுத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி வரலாறு காணாத வெற்றி பெற்றுள்ளது.

நரேந்திர மோடி இந்திய தேசத்தின் பிரதமர் என்பது உறுதியாகிவிட்ட நிலையில் காங்கிரஸ் கட்சி வரலாறு காணாத தோல்வியைச் சந்தித்துள்ளது.

இனிமேல் காங்கிரஸின் அரசியல் எதிர்காலம் சூனியம் என்று சொல்லும் அளவில் காங்கிரஸின் செல்வாக்கு அடிபட்டு பொடியாகிப் போயிற்று.

இதற்கெல்லாம் காரணம் காங்கிரஸின் செலுட்டுத்தனமான ஆட்சி; இந்திய தேசத்தின் வல்லாதிக்கத்தை பேடித்தனமாக்கிய மன்மோகன் சிங்கின் ஆளுமையற்ற பொம்மைத்தனம்; சோனியா காந்தியின் வேற்றுநாட்டுப் புத்தி; ராகுல் காந்தியின் மடமைத்தனம் என்பன எனலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்தமிழர்களுக்கு சோனியாவும், ராகுல் காந்தியும், மன்மோகன் சிங்கும் செய்த துரோகத்தனமும் மூல காரணம் என்று கூறுவதில் எந்தத் தவறுமில்லை.

ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவோம் காப்பாற்றுவோம் என்று கூறி கழுத்தறுத்த வன்செயல் காங்கிரஸை வேரறுப்பதற்கான ஊழ்வினையாயிற்று.

இந்திய தேசத்தில் வரலாறு காணாத அளவில் காங்கிரஸ் தோல்வி கண்டது என்பது சாதாரணமானதல்ல.

இந்தத் தோல்வி காங்கிரஸிற்கு மட்டுமல்ல, ஆட்சிப் பீடங்களில் அமர்ந்து கொண்டு நாளை என்ன நிலைமை என்று சிந்திக்காத அத்தனை ஆட்சியாளர்களுக்கும் மக்கள் தருகின்ற தீர்ப்பு இதுவே என்பதும் இந்தியத் தேர்தலின் பெறுபேறுகள் சொல்லி நிற்கின்ற தத்துவமாகும்.

இத்தத்துவத்தை காலம் பிந்தியேனும் உணர்ந்து கொள்வது நல்லது என்ற செய்திக்கு அப்பால்,

இந்தியாவின் பிரதமராகப் பதவி ஏற்கப் போகும் நரேந்திர மோடியை ஈழத்தமிழர்கள் தங்கள் இதயத்தால் வாழ்த்தி நிற்கின்றனர்.

2009-ல் வன்னிப் போரில் ஈழத்தமிழர்கள் சந்தித்த இழப்பின் நினைவலைகள் வாட்டுகின்ற இந்த வேளையில் காங்கிரஸ் குடிமுழுகிப் போனது என்ற செய்தி எங்கள் நெஞ்சு வலிக்கு ஒத்தடம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது.

எதுவாயினும் எங்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கு நரேந்திர மோடி பிரதமராவது நல்லதொரு சந்தர்ப்பம்.

தேர்தல் பிரசாரத்தில் நரேந்திர மோடி எங்கள் தொடர்பில் கூறியவை இப்போதும் எங்கள் செவிகளில் நம்பிக்கை தரும் உரைகளாக ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

எனவே நரேந்திர மோடியின் ஆட்சியில் எங்களுக்கான விடிவு கிடைக்க உரிய உபாயங்களைச் செய்தாக வேண்டும். எனினும் எங்கள் அரசியல் தலைமையில் முக்கியமான சில தலைகள் எந்தப் பக்கம் என்று தெரியாததால் மோடியையும் பகைக்கும் வண்ணம் அவர்கள் நடந்து கொள்ளலாம் கவனம்.

## விக்னேஸ்வரனை நீக்க ஜெயா சூழ்ச்சி

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அந்த பதவியில் இருந்து அகற்றும் சூழ்ச்சியின் பின்னணியில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இருப்பதாக வடக்கின் அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளதாக சிங்கள பத்திரிகை கூறியுள்ளது.

விக்னேஸ்வரன், அடிக்கடி வடக்கின் ஊடகவியலாளர்களுடனும் முரண்படுவதாகவும் அவர் கொள்கைகளை காட்டிக்கொடுப்பவர் என ஜெயலலிதாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய தமிழகத்தை சேர்ந்த ஈழவாதிகள் கூறியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக கூட்டமைப்பிற்குள் பனிப்போர் ஏற்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## பல்கலையை திறக்க நடவடிக்கை எடுங்கள்

### யாழ்.சர்வமத குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 வருட உள்நாட்டுப் போரின் போது மூடப்படாத பல்கலைக்கழகம் சமகாலத்தில் சிறு சிறு விடயங்களுக்கு மூடப்படுவது ஆழ்ந்த வேதனையைத் தருகின்றது. இவ்வாறு நாகவிகாரையில் இயங்கும் யாழ்ப்பாண சர்வமத குழுவின் செயலாளர் ஐ.டி.டிக்சன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி வசந்தி அரசரட்ணம் அவர்களுக்கு பல்கலைக்கழகம் மூடப்பட்டது தொடர்பாக எழுதிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாண சர்வமத குழுவாகிய நாம், இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்காக சமயங்கள் நான்கின் தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்படுகின்றோம். நாம் யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டதையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

கடந்த 30 வருட உள்நாட்டுப் போரின் போது மூடப்படாத பல்கலைக்கழகம் சமகாலத்தில் சிறு சிறு விடயங்களுக்கு மூடப்படுவது ஆழ்ந்த வேதனையைத் தருகின்றது.

ஒவ்வொரு அறிவியல்சார் சிந்தனையாளன்; கண்டுபிடிப்பாளன் சிந்திக்க, எழுத, பேச, கொள்கைகள் கோட்பாடுகள் வகுக்க ஆரம்பிக்கின்ற இடமாக பல்கலைக்கழகத்தைக் காண்கின்றோம்.

எத்துறையைச் சேர்ந்த மாணவர்களாலும் பிழையான தீர்வுகளுக்கு வரும்போது அவர்களை சரியான வழியில் வழிநடத்திச் செல்வது அத்துறை சார்ந்த விரிவுரையாளரின் கடமை.

இதைவிடுத்து ஒரு மாணவனின் செயலுக்காக அல்லது ஒரு சில மாணவர்களின் செயல்களுக்காக பல்கலைக் கழகக் கல்வி நடவடிக்கைகளை நிறுத்துவதை நியாயப்படுத்த முடியாது.

எனவே பல்கலைக்கழகத்தை திறந்து கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படி யாழ்ப்பாண சர்வமத குழுவினராகிய நாம் கேட்கின்றோம் என அதில் மேலு ம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-51)

## காவியுடை அணிந்த பலர் நிதி சேகரிப்பதில் ஈடுபாடு

### பிரதமர் தெரிவிப்பு

பௌத்த துறவிகளை போன்று காவியுடை அணிந்த பலர் நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இதில் பிச்சையெடுப்போரும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய பிரதமர், இது தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படவுள்ளனர.

இதேவேளை, இலங்கையில் பௌத்த தர்மத்தையும் பௌத்த துறவிகளையும் பாதுகாக்க வேண்டும். அதேநேரம் நாட்டில் பௌத்த துறவிகளின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதும் பௌத்த தர்மத்துக்கு பிரச்சினையை உண்டு பண்ணும் என்றும் அவர் தெரிவித்தார். (2)

## ரயில் நிலையம் அருகே கிளைமோர்கள் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ரயில் நிலையத்திற்கு அருகில் பயன்படுத்தப்படாத கிணறு ஒன்றில் இருந்து 13 கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கிணற்றை துப்புரவு செய்து கொண்டிருந்த தொழிலாளிகள் சிலருக்கு இந்த குண்டுகள் கிடைத்துள்ளதுடன், அவை பழைய நிலைமையில் இருந்துள்ளதாக கூறப்படுகிறது. எனினும் குண்டுகள் எதுவும் மீட்கப்படவில்லை என கிளிநொச்சியில் கடமையாற்றி வரும் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். (எ-11)

## துண்டுப்பிரசுரம் வைத்திருந்தவர் விசாரணையில்

(யாழ்ப்பாணம்)

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவு தின துண்டுப்பிரசுரம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுன்னாகம் வீதி, நிலாவரைப் பகுதியினைச் சேர்ந்த நபர் ஒருவர் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் நள்ளிரவு அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தனக்கும் மேற்படி துண்டுப்பிரசுரத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையெனவும் யாரோ வீட்டிற்கு வந்து எறிந்துவிட்டுச் சென்றதினையே தான் எடுத்து வைத்திருந்ததாக குறித்த நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கைதான சந்தேகநபர், பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ- 6)

## மாணவர் வேட்டையில் பொலிஸார்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிரில் நேற்று மாலை இணை சுகாதார கல்வியியற் கல்லூரி மாணவர் சங்கம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. ஆர்ப்பாட்டம் நிறைவடைந்ததை அடுத்து அதில் கலந்து கொண்ட மாணவர் ஒன்றிய தலைவர்களை பொலிஸார் கைது செய்தனர். (எ-11)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



ஆன்மீக உரை

நாமும் நம் முன்னோர்களும் இதுவரை செய்த பூஜைகள், தர்மங்கள், சத்கர்மாக்கள் ஆகியவற்றின் புண்ணிய பலனால் இந்த விசேட பூஜையில் கலந்து கொள்ளும் பாக்கியம் நமக்குக் கிடைத்துள்ளது.

நாம் எத்தகைய பூஜை செய்தாலும் அவை அனைத்தும் ஐஸ்வர்யத்தினுள்ளேயே அடங்கும். ஐஸ்வர்யம் என்றால் செல்வம் மட்டுமல்ல நம் வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் மிகவும் முக்கியமாகத் தேவைப்படும் சீரான தேவைகள் அனைத்தும் ஐஸ்வர்யத்தினுள்ளேயே அடங்கும். அதில் ஏதோவொன்றை வேண்டி ஒருவர் பிரார்த்தனை செய்யலாம். நாம் தேடும் செல்வத்தின் திறவுகோலே பிரார்த்தனை தான்.

பெற்றோரை மதித்து நடத்தல், மன்னித்தல், மன்னிப்புக்கேட்டல், மற்றவர்களுக்கு மனக்காயங்கள் ஏற்படாதவாறு நடத்தல், உறவு முறைகளின் முக்கியத்துவம் என்பவை பற்றி எடுத்துரைக்கவும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சுயநலத்தை ஒழியுங்கள்



- சுதந்திரம் தான் வளர்ச்சியின் ஆணிவேர். சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி பெற முடியாது.
- மனித இதயத்தின் அடிஆழத்தில் கடவுள் ஒளிந்து கொண்டிருக்கிறார். அவரை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன்.
- கோபம் மனிதனை முன்னேற விடாமல் தடுக்கிறது. அமைதியுடன் நிலைகுலையாத மனம் படைத்தவனே பணியில் சிறக்க முடியும்.
- மற்றவரைக் குறை கூறுவது மனித இயல்பு. நம் கண்களை நாம் பார்க்க முடியாதது போல நம் தவறுகளை நாம் உணர்வதில்லை.
- பெற்றுக் கொள்வதில் பெருமை என்ன இருக்கிறது? கொடுப்பவனே வாழ்வில் பேறு பெற்றவன் ஆவான்.
- தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது.
- நம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான இன்பம் அளிக்கும் பொருள் உலகத்தில் இல்லவே இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை ஐக்கிய வி.க காற்பந்தாட்டம்; பருத்தித்துறை டயமன்ஸ் அணி சம்பியன்

**பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பருத்தித்துறை டயமன்ஸ் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.**





காற்பந்தாட்ட இறுதிப்போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக பேராசிரியர் மா.நடராஜ சுந்தரம் கலந்து கொண்டார்.

இறுதிப் போட்டியில் பருத்தித்துறை டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பொமேர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பம் முதல் இரு அணி வீரர்களும் விறுவிறுப்பாக போட்டியில் பங்கேற்றனர். போட்டி ஆரம்பமாகி 2 நிமிடங்களின் பின் பொமேர்ஸ் அணி வீரர் ப.வைகுந்தன் கோல் ஒன்றை அடித்தார். இதனை தொடர்ந்து 3 நிமிடங்களின் பின்னர் டயமன்ஸ் அணியின் தலைவர் ம.பிரேம்குமார் கோல் ஒன்றினை பெற போட்டி விறுவிறுப்பாக அமைந்தது. மீண்டும் டயமன்ஸ் அணி வீரர் து.துசிகரன் கோல் ஒன்றை அடித்தார். இதனையடுத்து பொமேர்ஸ் அணி வீரர் ம.கோபி ஒரு கோலை அடித்து 2:2 என்ற நிலையில் சமநிலை படுத்தினார்.

பின்னர் போட்டி இடைவேளைக்காக சிறிது நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது. இடைவேளையினை அடுத்து ஆரம்பமான போட்டியில் இரு அணி வீரர்களும் ஆக்ரோசமாக விளையாடினர்.

நடுவரினால் பொமேர்ஸ் அணிக்கு பனாட்டி முறைமையும் வழங்கப்பட்டது. எனினும் அதனை அணியினர் சாதகமாக்காமல் பந்தினை வெளியில் அடித்தனர். போட்டியில் இரு அணிகளும் தலா 2:2 என்ற கோல்களைப் பெற்று விறுவிறுப்பாக விளையாடிக்கொண்டு இருந்த நிலையில் போட்டி முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் மீதமாக உள்ள நிலையில் டயமன்ஸ் அணி தலைவர் பிரேம்குமார் மின்னல் வேகத்தில் பந்தினை எதிரணி வீரர்களிடமிருந்து பறித்து அதனை .லாவகமாக ஒரு கோலாக மாற்றினார்.

இதனையடுத்து போட்டி முடிவடை யும் வரை கோல்கள் பெறாத நிலையில் டயமன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது. இந்தப் போட்டியில் ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணியின் தலைவர் ம.பிரேம்குமார் தெரிவானார். (க-23)

## இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களிற்கிடையிலான 26 ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகியுள்ளது.

இதில் ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் துரையப்பா விளையாட்டரங்கில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன. எனவே இப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் உரியநேரத்திற்கு சமுகமளிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-23)

# ஜே.பி.எல். கிரிக்கெட் சுற்றுப்போட்டி




பற்றீசியன்ஸ் வெற்றி

ஜே.பி.எல் இரண்டாவது பருவகாலத்திற்கான இடம் பெற்ற எட்டாவது போட்டியில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

இப் போட்டியில் திருநெல் வேலி YMHA விளையாட்டுக் கழக அணியும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதியது. நாணயற்சுழற்சியில் வென்ற பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் படி முதலில் துடுப்பாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 32 உதிரிகள் அடங்கலாக 7 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அஜித்டர்வின் 65 ஓட்டங்களையும், டியூட்டர் 20, லவி 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் திருநெல்வேலி YMHA விளையாட் டுக் கழக அணி சார்பில் சுதாகரன் 214 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், டிஷாந்தன் 20 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் , நிஷாந்தன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 151 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய திருநெல்வேலி YMHA விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் ராஜேந்திரன் 29, நிலாஜனன் 28, ஜெயராஜ் 13 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 14 ஓட்டங்கள் கிடைத்தது. வேறு எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டவில்லை. பந்துவீச்சில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியின் அஜித்டர்வின் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சுஜீவன், நிஷாந்தன் மற்றும் கிளிங்டன் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இப் போட்டியில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 47 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக துடுப்பாட்டத்தில் 65 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியின் அஜித்டர்வின் தெரிவானார்.




கே.சி.சி.சி வெற்றி

ஜே.பி.எல் இரண்டாவது பருவகாலத்திற்கான இடம்பெற்ற ஒன்பதாவது போட்டியில் ஜெயரூபன் மற்றும் ஜனுதாஸின் அதிரடி கைகொடுக்க KCCC விளையாட்டுக் கழக அணி இலகுவாக வெற்றி பெற்றது.

இப் போட்டியில் KCCC விளையாட்டுக் கழக அணியும் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

நாணயற்சுழற்சியில் வென்ற ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன் படி முதலில் துடுப்பாடிய ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அரவிந்தன் 37 பந்துகளில் ஆட்டமிழக்காது 42, சுஜன் 20, திவாகரன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 25 ஓட்டங்கள் கிடைத்தன. வேறு எவரும் இரட்டை இலக்கங்களைக் கூட எட்டவில்லை. பந்துவீச்சில் KCCC விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரதீஸ் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் , ஜனுதாஸ் மற்றும் ராகுலன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 137 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய KCCC விளையாட்டுக் கழக அணி ஜெயரூபன் மற்றும் ஜனுதாஸின் அதிரடிகள் கைகொடுக்க 15.3 ஓவர்களில் 2 விக்கெடடுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது.

இதில் ஜெயரூபன் 48 பந்துகளில் 72 ஓட்டங்களையும், ஜனுதாஸ் 12 பந்துகளில் 33 ஓட்டங்களையும், ராகுலன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார், பந்துவீச்சில் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணியின் தீபன், சுஜன் தலா ஒரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இதன் மூலம் இப் போட்டியில் KCCC விளையாட்டுக் கழக அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக துடுப்பாட்டத்தில் அதிரடியாக 72 ஓட்டங்களைப் பெற்ற KCCC விளையாட்டுக் கழக அணியின் ஜெயரூபன் தெரிவானார்.




கிறாஸ் கொப்பர்ஸ் வெற்றி

ஜே.பி.எல் இரண்டாவது பருவகாலத்திற்கான இடம்பெற்ற பத்தாவது போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. இப் போட்டியில் மூளாய் விக்டரி விளையாட்டுக்கழக அணியும கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

நாணயற்சுழற்சியில் வென்ற மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணி முதலில் களத்தடுப்பாடத் தீர்மானித்தது. இதன் படி முதலில் துடுப்பாடிய கிறாஸ்கொப்பர்ஸ் விளை யாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களை குவித்தது.

இதில் சரண்ராஜ் 20 பந்துகளில் 51 ஓட்டங்களையும், கஜதீபன் 38 ஓட்டங்களையும், ஜனந்தன் 23 ஓட்டங்களையும், டிலோஷன் மற்றும் காந்தசீலன் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மூளாய் விக்டரி விளையாட்டுக்கழக அணி சார்பில் விபுலன் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் , பிரஜாந் 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் , சுரேநதர் மற்றும் தனுயன் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 178 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய மூளாய் விக்டரி விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களை மட்டுமே பெற்று போட்டியில் தோல்வியைத் தழுவியது.

இதில் டானியல் 17, கஜேந்திரன் 16, சுரேந்தர் 10 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 30 ஓட்டங்கள கிடைத்தது. வேறு எவரும இரட்டை இலக்க ஓட்டங்களை எட்டவில்லை. பந்துவீச்சில் கிறாஸகொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியின் அஜித் 22 ஓடடங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சந்தனன் 2, சரண் ராஜ் மறறும் கஜதீபன் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் மூலம் இப் போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி 71 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக துடுப்பாட்டத்தில் 51 ஓட்டங்களையும் பந்துவீச்சில் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றிய கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியின் சரண்ராஜ் தெரிவானார. (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா

| கூட்டணி / கட்சி | வெற்றி | மொத்தம் |
|---|---|---|
| பா ஜ க கூட்டணி | 337/543 | 337 |
| காங்கிரஸ் | 58/543 | 58 |
| மற்றவர்கள் | 143/543 | 144 |

## தமிழ் நாடு

| கூட்டணி / கட்சி | வெற்றி | மொத்தம் |
|---|---|---|
| அ தி மு க | 37/39 | 37 |
| தி மு க கூட்டணி | 0/39 | 0 |
| பா ஜ க கூட்டணி | 2/39 | 2 |
| காங்கிரஸ் | 0/39 | 0 |
| கம்யூனிஸ்ட் | 0/39 | 0 |

# பிதிர்க்கடன் செலுத்தும் நிகழ்வில் கலந்து கொள்ளுங்கள்!

## பல்கலை ஆசிரியர் சங்கம் அழைப்பு

வன்னிப் போரில் உயிரிழந்த உறவுகளுக்காக நாளை நகுலேஸ்வரத்தில் நடைபெறும் பிதிர்க்கடன் செலுத்தும் நிகழ்வில் மக்கள் கலந்து கொள்ளலாம் என யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

காரைநகர் மக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ்வில் வீடுகளில் பிதிர்க்கடன் செலுத்த முடியாதவர்கள் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 8.00 மணி தொடக்கம் இந்நிகழ்வு இடம்பெறும். இதற்கென பணச்செலவுகள் எவையும் ஏற்பட மாட்டாது என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-11)

## பெரும் கட்...

தேர்தலில் தமிழ்நாட்டில் அ.தி.மு.க பெரு வெற்றியை பெற்று மூன்றாவது பெரிய கட்சியாக முன்னேறியுள்ளது.

தமிழ்நாட்டில் போட்டியிட்ட 39 தொகுதிகளில் 37 தொகுதிகளில் அ.தி.மு.க பெரு வெற்றி பெற்றுள்ளது.

கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகம் எந்தவொரு இடங்களையும் கைப்பற்றவில்லை.

பாரதிய ஜனதா கட்சி கூட்டணியில் இணைந்து போட்டியிட்ட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தான் போட்டியிட்ட இடத்தில கூட வெற்றி பெறவில்லை. (எ-11)

# மே 18இல் பூசை வழிபாட்டிற்கு தெல்லிப்பழையில் படையினர் தடை

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை வித்தகபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட ஆலயங்களில் நாளை 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூசை வழிபாடுகள் செய்யக் கூடாது என படையினர் எச்சரிக்கை செய்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மே 18-ம் திகதி வன்னியில் உயிரிழந்தவர்களின் நினைவேந்தல் நிகழ்வு என்பதால் படையினர் பூசை வழிபாடுகளை நிறுத்துமாறு எச்சரிக்கை செய்வதாக தெரிய வருகிறது.

இதேவேளை வித்தகபுரம் பகுதியில் இரண்டு வைரவர் கோவில்களில் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் அலங்கார உற்சவத்தையும் நாளை 18-ம் திகதி நிறுதுமாறு படையினர் எச்சரிக்கை செய்துள்ளதன் காரணமாக அப் பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

ஆலய பூசை வழிபாடுகளை இடை நிறுத்துவது ஆக விதிமுறைகளுக்கு இழுக்கு என்பதை படையினர் புரிந்து கொள்ளாமல் செயற்படுவது மிக மோசமான செயல் என்று ஆலய நிர்வாகங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (ந)

## இலங்கைக்கு...

இந்திய பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், பாரதிய ஜனதாக் கட்சி அறுதிப்பெரும்பான்மை பெற்றுள்ளது.

நரேந்திர மோடி புதிய பிரதமராவது உறுதியாகி விட்டது. இந்த நிலையில் நேற்றுக் காலை தொலைபேசியில் மோடியைத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார். அத்துடன் பிரதமர் பொறுப்பை ஏற்றதும் இலங்கைக்கு வருமாறும அழைப்பு விடுத்தார் என்று சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் பா.ஜ. க. வெற்றி பெற்றமைக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

இந்திய மக்களின் தீர்ப்பை இலங்கை வரவேற்கிறது . விரைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மோடியைத் தொடர்புகொண்டு வாழ்த்துவார் - என்றும் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார். (எ-11)

## தோல்வியை...

வித்தனர்.

டில்லியில் நேற்று காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் பத்திரிகை யாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது ராகுல் பேசுகையில், பா.ஜனதாவுக்கு மக்கள் வாய்ப்பு வழங்கியுள்ளனர். அவர்களுக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தேர்தலில் காங்கிரஸ் மிக மோசமாக செயல்பட்டுள்ளது. அதைப் பற்றி கட்சி நினைத்துப் பார்க்க வேண்டும். கட்சியின் துணைத்தலைவர் என்ற முறையில் இதற்கான முழு பொறுப்பையும் நான் பணிவுடன் ஏற்றுக்கொள்கிறேன் என்றார். (எ-11)

## 50 அந்தணர்களைக்...

கராஜா துவாரகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ரில்ஹோ விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இறுதிப்போரில் உறவுகளிற்கு ஆத்மசாந்தி வேண்டி மிகப்பெரிய யாகம் எதிர்வரும் 18ம் திகதி கீரிமலையில் நடைபெறவுள்ளது. 50 இற்கும் அதிகமான அந்தண சிவாச்சாரியர் பங்கெடுக்கும் இந்த யாகத்தினைத் தொடர்ந்து ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

இது எந்தவொரு அரசியல் சார்பும் அற்ற நிகழ்வு. இந்துக்களை பொறுத்தவரை இறந்தவர்களுக்காக இவ்வாறு ஆண்டுதோறும் நினைவு தினத்தை முன்னெடுப்பது வழமை.

முள்ளிவாய்க்காலில் உயிரிழுந்தவர்கள் எவ்வளவு பேரென்பது பற்றிய உறுதியான தகவல்கள் இல்லை. ஆனால் அவர்கள் எமது உறவுகள். அவ்வகையிலேயே அவர்களது ஆத்மா சாந்தியடைய வேண்டி யாகமும் கிரியைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதில் கலந்துகொண்டு உயிரிழந்த உறவுகளுக்கு இறுதிக்கிரிகையினைச்செய்ய வருகை தரும் குடும்பங்கள் தமது உறவுகளிற்கான கிரியைகளை மேற்கொள்ள உடுபுடவைகள், தானியங்களென அனைத்தும் வழங்கப்படும்.

அவர்கள் அந்தணர்கள் முன்னிலையில் புண்ணிய கருமங்களை செய்யமுடியும். தற்போதைய சூழலால் வாகனங்களை ஏற்பாடு செய்ய முடியாதுள்ளது. அவ்வாறு ஏற்றி இறக்குவதை தடுத்து நிறுத்தினால் வீணான விமர்சனங்கள் எழலாமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பங்குகொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட்டவரும் காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்தவருமான க.தம்பிராசா தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## முள்ளிவாய்க்கால் நினை...

சலி செலுத்தும் முகமாக கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் நினைவேந்தல் நிகழ்வினை ஆளும்கட்சி மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்பிரகாரம் நேற்று முற்பகல் 11 மணியளவில் மாகாண சபையின் பேரவைச் செயலகத்திற்கு வருகைதந்த உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன், திருமதி மேரிகமலா குணசீலன் ஆகியோர் வருகை தந்திருந்தனர். இதேவேளை வலி.வடக்கு துணைத்தவிசாளர் எஸ்.சஜீவன் ஆகியோர் உள்ளிட்டவர்களும் வருகை தந்தனர்.

இதேவேளை பேரவைச் செயலக வாயிலை இழுத்து மூடி பொலிஸார் உள்நுழைய அனுமதிக்க முடியாது என்றும் இது மேலிடத்து உத்தரவு என்றும் கூறினார். உள்ளுக்குள் நுழைய எத்தணிக்காது சென்று விடுங்கள் என்றும் எச்சரிக்கப்பட்டனர்.

இந்நிலையில் பொலிஸாருடனான சமரச பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையில் மாகாண சபையின் பேரவைச் செயலகத்திற்கு முன்பாகவுள்ள சிறு வீதியில் ஓரமாக அஞ்சலிச்சுடரை ஏற்றிவைத்தார் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்.

அஞ்சலிச் சுடர் ஏற்றப்பட்டு ஒரு சில வினாடிகளுக்குள் அங்கு ஓடி வந்த சாவகசேரி பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி வன்னியாராட்சி தீபத்தை தட்டிக்கீழே விழுத்தியதோடு பலர் பார்த்திருக்க மிகவும் அநாகரிகமான முறையில் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டார்.

அதேவேளை போரில் உயிரைப் பறிகொடுத்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த ஏற்றப்பட்ட தீபத்தை சப்பாத்துக்காலினால் எட்டி உதைத்து அணைக்க முற்பட்டதோடு ஏனைய பொலிஸாரினையும் அழைத்து தீபத்தை அணைக்க பணித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் வடக்கு மாகாண சபையில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டதோடு கலகம் அடக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அதேவேளை மாகாண சபை உறுப்பினர்கள் உள்நுழைய அனுமதி மறுத்த பொலிஸார் சிவில் உடையிலிருந்த இராணுவப் புலனாய்வாளர்களையும், பொலிஸ் புலனாய்வாளர்களையும் உட்செல்ல அனுமதி வழங்கியிருந்தனர்.

இதேவேளை நேற்று இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விற்கு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சரோ, அவைத் தலைவரோ, அமைச்சர்களோ, உறுப்பினர்களோ பங்கு கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பாஜக...

நரேந்திர மோடி போட்டியிட்ட வாரணாசி மற்றும் வதோதரா ஆகிய தொகுதிகளில் இலட்சக் கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற தேர்தலில் மோடி அலையால் காங்கிரஸ் கட்சி தோல்வியைத்தழுவும் என்று கூறப்பட்டது.

மக்கள் மனதிலும் மாற்றம் வேணடும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்ததால் காங்கிரஸ்தோற்கும்என்று நாடெங்கும் பேசப்பட்டு வந்தது.

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் இருந்து அடிமட்டத்து தொண்டர வரை காங்கிரசில் எல்லாருமே தோல்வியை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஏதோ கொஞ்சம் தோல்வி அடைவோம் என்றே காங்கிரசில் பெரும்பாலானவர்கள் நினைத்தனர்.

சில காங்கிரஸ் தலைவர்கள் தோற்றாலும் 3-வது அணியில் உள்ள கட்சிகளின் ஆதரவைப் பெற்று மீண்டும் அரியணையில் அமர்ந்து விடலாம் என்று கனவு கொண்டிருந்தனர். ஆனால் அந்த கனவை தகர்த்து தவிடு பொடியாக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி படுபாதாள வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

காங்கிரஸ்கூட்டணி இந்த தடவை சுமார் 100 இடங்களை பெறும் என்று கருத்து கணிப்புகளில் கூறப்பட்டிருந்தது. ஆனால்காங்கிரசுக்கு அந்த அளவுக்கு கூட வெற்றி கிடைக்க வில்லை.

காங்கிரஸ் கூட்டணிக்கு 60 இடங்களே கிடைத்துள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு இவ்வளவு பலத்த அடி விழுமஎன்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

கடந்த 2009-ம் ஆண்டு நாடெங்கும் வெற்றி பெற்றிருந்த தொகுதிகளில் 163 தொகுதிகளில் இந்த தடவை காங்கிரஸ் கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது.

காங்கிரஸ் இந்த அளவுக்கு மோசமாக தோற்கும் என்று சோனியா, ராகுல் இருவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

காங்கிரசுக்கு பலத்த அடியை கொடுத்து பா.ஜ.க. இந்த தடவை சுபர் வெற்றியை ருசித்துள்ளது. 300 இடங்களை தாண்டி இப்போது தான் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது.

கடந்த 2009-ம் ஆண்டு தேர்தலுடன் ஒப்பிடுகையில் இந்த தடவை நாடெங்கும் பா.ஜ.க. 170 தொகுதிகளை அதிகம் கைப்பற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. பா.ஜ.க.வுக்கு இது இமாலய வெற்றியாகும்.

இதேவேளை இந்திய மக்களவைத் தேர்தலில முடிவுகள் மக்களின் வெற்றியை பிரதிபலிப்பதாக பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்திய மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணி 339 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி 59 தொகுதிகளில் மாத்திரே வெற்றி பெற்று பாரிய பின்னடவை எதிர்நோக்கியுள்ளது. ஏனைய கட்சிகள் 147 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.

பாரதிய ஜனதாக் கட்சியின் இந்த வரலாறு காணாத வெற்றி, இந்தியாவில் புதிய யுகமொன்றை உருவாக்கியுள்ளதாக மோடி சுட்டிக் காட்டியுள்ளார். இந்தியாவை சிறந்த வழியில் முன்நகர்த்திச் செல்வதற்கு எதிரபார்த்துள்ளதாகவும், மக்களின் நலனுக்காக செயற்படவுள்ளதாகவும் மோடி தெரிவிக்கின்றார்.

தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர், நரேந்திர மோடி தனது தாயாரை நேரில் சென்று சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

இம்முறைமக்களவைத்தேர்தலை போன்று, இதற்கு முன்னர் பார்த்ததில்லை என பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர் எல்.கே. அத்வானி கூறியுள்ளார்.

இதுவரை காலமும் வெற்றிபெறறிராத தொகுதிகளில், இம்முறை பாஜக வெற்றி பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தமைக்கு சோனியா காந்தியும், ராகுல் காந்தியுமே பொறுப்புக்கூற வேண்டுமென காங்கிரஸ் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் நலனுக்காகவும், சமூக ஒற்றுமைக்காகவும், மக்களுக்காகவும் காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் செயற்படுமென காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

மக்களின் தீர்ப்பிற்கு மதிப்பளிப்பதாகவும், அதனை ஏற்றுக் கொள்வதாகவும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி கூறியுள்ளார். ஆம் ஆத்மி கட்சிக்கு இதுவொரு சிறந்த ஆரம்பம் என கட்சியின் தலைவர் அரவிந் கெஜ்ரிவால் குறிப்பிட்டுள்ளார்.

டில்லி முடிவுகள் சற்று ஏமாற்றமளிப்பதாகவும், நாட்டின் தலைநகரில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டுமெனவும் கெஜ்ரிவால் சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்மிடம் அதிகளவு பணம் மற்றும் அதிகாரங்கள் இல்லாத போதிலும், மக்களின் நலனை மாத்திரமே கருத்திற்கொண்டு செயற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலில் வெற்றிபெற்றுள்ள நரேந்திர மோடிக்கு, தென்னிந்திய நடிகர் ரஜனிகாந், ஷாருக்கான், அனுபம் கீர், பிரீத்தி ஷிந்தா மற்றும பாடகி ஆஷா போஸ்லெ ஆகியோர் சமூக வலைத்தளங்கள் ஊடாக தமது வாழ்த்துக்களை பகிர்ந்துள்ளனர். (எ-11)

## வெற்றிக்...

மாறாக எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.

போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்காமையினால் புலி ஆதரவாளர் என்ற விமர்சனங்கள் எழக்கூடும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கனடா செயற்படுகின்றது என குற்றம் சுமத்தப்படக் கூடும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 2006-ம் ஆண்டு முதல் கனடாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறைவடைந்து ஐந்து வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது.

போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவதனைவிடவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதனையே முதன்மையாகக் கருதப்பட வேண்டும் என விட்டிங் குறிப்பிட்டுள்ளார்.

போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்காத போதிலும் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடி பிரதமரா...

ளர் டாக்டர் வசந்த பண்டார மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் இயங்கிய காலத்தில் நோர்வேயின் வெள்ளைத்தோல் போர்த்திய சொல்ஹெய்மை அனுசரணையாளராக நியமித்து இலங்கையில் தனித் தமிழீழத்தை உருவாக்க அனைத்து வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளபட்டன.

ஆனால், தேசிய சக்திகளினதும் படையினரது அர்ப்பணிப்புடனும் வெள்ளைத் தோல் போர்த்திய புலியின் முயற்சி தோற்கடிக்கப்பட்டது.

இன்றுஅந்தமுயர்சி தென்னாபிரிக்காவின கறுப்புத் தோல் போர்த்திய புலிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படு கின்றது. இதன் பன்னணியில் வெளிநாடுகளின் நிகழ்ச்சி நிரலை அமுல் படுத்தும் அரசுக்குள்ளிருகம் சில சக்திகள் இயங்குகின்றன.

தென்னாபிரிக்காவின் விசேட பிரதிநிதியான சிறில் ரமபோஸா குழுவின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி தேசிய பிரச்சினைக்கு தீரவு காண வேண்டுமென்றும் இல்லாவிட்டால் ஐ.நா. மற்றும் வெளிநாடுகளின் அழுத்தங்கள அதிகரிக்கும் என்றும ஒரு கருத்தை நாடடுக்குள் பரப்பி வருகினறனர்.

இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை. அரசுக்குள்ளிருக்கும் இடது சாரிகள் தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கவே இவ்வாறான கருத்துகளை பரப்புகின்றனர்.

விடுதலைப் புலிகள் காலத்தில் வெள்ளைத்தோல் முன்னெடுத்த முயற்சி இன்று கறுப்புத் தோலால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை காங்கிரஸ் அரசை விட பயங்கரமாக மோடி அர்சு எமது பிரச்சினையில் நேரடியாக தலையிடும் என்றும்டாக்டர்வசந்த பண்டார தெரிவித்தார். (எ-11)


இலவசமாக கற்க
அரியதோர் வாய்ப்பு!
FREE FREE
Advance Learning English | ஆங்கிலம்
Pre-starters | முன்பள்ளி & தரம் 01, 02
Young Learners | தரம் 03, 04, 05
Teens | தரம் 06-11 | O/L விசேட தயார்ப்படுத்தல்
General Users | ஏனையோர்
• பிரிட்டிஷ் கவுன்சில், கேம்பிறிட்ஜ் பாடத்திட்டம்
• மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை
• பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே
• சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
• பாட அலகு ஒன்று முற்றிலும் இலவசம்
• அடிப்படையில் இருந்து கற்கலாம்
உரையாடலுக்கான சிங்களம் | Spoken Sinhala
O/L கணிதம், விஞ்ஞானம் | English Medium
CALL 0779866409
பொற்பதி வீதி, கொக்குவில் (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்)
ALISON DIGILITE
Supported by YES! Suvadi
(6399)



3 - 6 மாதங்களில் அதிகூடிய வருமானத்துடன்
வெளிநாட்டு தொழில் & விசா உத்தரவாதமான
Hotel Management
(UK Certified ஹொட்டேல் தொழிற்கற்கை)
உங்கள் முன் 5 தெரிவுகள்




மலேசியாவில் வருமானத்துடன் கூடிய மேலதிக கற்கைநெறி
சிங்கப்பூர் / மலேசியா 4*/5* ஹொட்டேல் வேலைவாய்ப்பு
Dubai/Qatar ஹொட்டேல் வேலைவாய்ப்பு
Switzerland/ UK/ New Zealand/ Student Visa with Work Permit
Australia Student Visa with Work Permit
மேலதிக விபரங்களுக்கு:
www.sikaram.lk
முற்பதிவு: 077 36 16 798
Visa/Work Permit ஏற்பாடுகள் யாவும் நாமே செய்து தருவோம்!
FREE OFFER
அனுமதி பெறும் அனைவருக்கும் 3 மாத கால ENGLISH THE EASYWAY ஆங்கிலக் கற்கைநெறி முற்றிலும் இலவசம்
வெளிநாடு செல்ல விரும்பாதவர்களுக்கு உள்நாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும்
Get Set for Careers @ சிகரம் Sikaram Gateway to Education & Employment & TakeOff your dreams
(C-7386)
தொழில் திறன்களை வளர்த்து => கனவுகளுக்கு இறக்கை கட்டுங்கள்
சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி, இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்



Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.
★ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
★ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
★ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
★ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.
(C-7377)
Vivekananda Academy
அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393



SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதிகள் சேவை



உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்
ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்
(C-7375)
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net



விடுதலைப் பெருவிழா
வாருங்கள்! இலவசம்!
கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி, வியாபாரத் தோல்விகள்
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!
இடம்: மன்னார் விளையாட்டரங்கு, மன்னார்.
காலம் : 16,17,18 வைகாசி 2014
நேரம் : தினமும் மாலை 5.30மணி
"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
(மத்தேயு 11:28)
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
தலைமன்னார் வீதி, பெரியகமம், மன்னார்.
(6368)


## மோடி...

உங்கள் தலைமையில்பாரதியஜனதா கட்சி கண்டிருக்கும் இந்த மகத்தான தேர்தல் வெற்றி, இந்தியத் தேர்தல் வரலாற்றில்ஒரு சாதனை எனலாம். பலம்பொருந்திய ஒரு அரசாங்கத்தை அமைக்கப்போகும் நீங்கள் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் இணக்கத் தீர்வொன்றினைக்காணபதற்கான உத்வேகததை ஏற்படுத்தக்கூடிய பயனுறுதியுடைய பங்களிப்பை வழங்குவீர்கள் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இலங்கைத்தமிழமக்களுக்கு நீதிகிட்ட உங்கள் தலைமையிலான அரசாங்கம் ஆரோக்கியமான கொள்கை அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் என நான் நம்பிக்கையுடன் எதிர பார்க்கின்றேன்.

இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.